KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823

Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 177 குரோதி வருடம், மாசி மாதம் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(25.02.2025) ஹிஜ்ரி 1446, ஷஃபான் - 26, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

© _akroo creations | february_2025

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823



## சஞ்சீவவின் கொலைச் சம்பவம் குறித்து பிரியந்தவை விசாரிக்குக!

### நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் தேவையென கம்மன்பில வலியுறுத்து

பாதாள உலக குழுத் தலைவர் கனேமுல்ல சஞ்சீவவின் கொலைச் சம்பவம் தொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவை விசாரணை செய்ய வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சின்.... » 02 பக்கம்




## உள்ளூராட்சித் தேர்தல்; வியாழனன்று விசேட பேச்சு

கே. சுபானி

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தும் திகதியை தீர்மானிப்பதற்காக விசேட பேச்சுவார்த்தையொன்று தேர்தல் ஆணைக்குழுவில் நாளைமறுதினம் (27) இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், விடயப் பொறுப்பு அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் எதிர்வரும் ஜூலை 02ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி அவற்றின் உறுப்பினர்கள்... » 02 பக்கம்

## 76 ஆண்டு சாபத்தில் 51% பங்கு ஜே.வி.பிக்குரியது

### மனோ எம்.பி. தெரிவிப்பு



"நாட்டின் வரலாற்றில் தேசிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணிக்கு பங்கு இல்லை என்று கூற முடியாது. கறுப்பு வரலாறு இருக்கிறது. அதனை மூடி மறைக்க முடியாது.
» 02 பக்கம்

# குற்றச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி!

## கடும் நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி உத்தரவு

நா. தினுஷா

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நேற்று (24) கூடிய தேசிய பாதுகாப்புச் சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குற்றச்செயல்களின் அதிகரிப்பால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ள அதேசமயம், நாட்டில் பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியுள்ளதாக முன்னெடுக்கப்படும் பிரசாரம் தொடர்பில் தீவிர கவனம் செலுத்துமாறு முப்படைத் தளபதிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் முதற்கட்டமாக முப்படையிலிருந்து தப்பிச்சென்ற சகலரையும் உடனடியாக கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா பாதுகாப்பு பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த பாதுகாப்புச் செயலாளர் இதுதொடர்பில் மேலும் கூறுகையில்,

நாட்டில் நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சம்பவங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. இராணுவ உறுப்பினர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது உண்மையாகவே சமூக பிரச்சினையே. தமது முழு சேவைக் காலமும் நிறைவடைவதற்கு முன்னரே சட்டத்துக்கு புறம்பாக இராணுவத்திலிருந்து... » 02 பக்கம்



## தேசிய பாதுகாப்புக்கு பெரும் நெருக்கடி

### சரத் வீரசேகர குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் தேசிய பாதுகாப்பை பொருட்படுத்தாமல் செயற்பட்டு வருவதாகவும் அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகள் தொடர்ந்து நீடித்தால் இனவாத பிரச்சினைகள் உருவாகி நாட்டின் பாதுகாப்புக்கு ... » 02 பக்கம்

## மூன்று கட்டங்களாக சம்பள அதிகரிப்பு செய்யத் தீர்மானம்

### முதலாம் கட்டம் ஏப்ரல் முதல்



சுகாதாரத் துறை உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பள அதிகரிப்பு மூன்று கட்டங்களாக இடம்பெறுமென்றும் முதலாம் கட்ட அதிகரிப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் முன்னெடுக்கப்படுமென்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். » 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...







## அரசியல் நோக்கங்களுக்காக பாதுகாப்பை பகடைக்காயாக்காதீர்!

### பிரதமர் ஹரிணி எதிர்த் தரப்பினருக்கு எச்சரிக்கை

எதிர்க் கட்சியினரின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தேசிய பாதுகாப்பை பகடைக்காயாக பயன்படுத்துவதாகவும் ஆனால் அதனூடாக எங்களை அவர்களால் வெற்றிகொள்ள முடியாது என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான... » 02 பக்கம்

### உஷ்



**சத்தியலிங்கம் எம்.பியை பாராளுமன்ற அரசியலமைப்பு விவகார குழுவில் சேர்த்த விவகாரம் தொடர்பில் கடும் விசனம் கொண்டுள்ளாராம் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.**

**பாராளுமன்றத்தில் இது தொடர்பில் கேள்வியெழுப்பவுள்ள அவர், நேற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் தலைமையில் நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இதனைப் பிரஸ்தாபித்துள்ளாராம்.**

**கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவராக தான் இருக்கும்போது தன்னை கேட்காமல் எப்படி இந்த நியமனம் வழங்கப்பட்டது என்பதே சிறிதரன் எம்.பியின் கேள்வி. எவ்வாறாயினும் கட்சிப் பிரச்சினைகளை பாராளுமன்றில் பேசுவது முறையல்லவென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறினாராம்.**



## பொலிஸ் மா அதிபரின் நியமன மனுக்கள் மீதான விசாரணை மே மாதத்தில்

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பணியாற்றிய தேசபந்து தென்னகோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட விதம் அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் எதிர்வரும் மே மாதம் 06, 07 மற்றும் 08ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் நேற்று (24) உத்தரவிட்டுள்ளது.

நீதியரசர்களான ப்ரீதி பத்மன் சூரசேன தலைமையிலான யசந்த கோதாகொட, ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி... » 02 பக்கம்

## தேசிய மக்கள் சக்தியுடன் மக்கள் தோற்றுவிட்டனர்

### சர்வசன அதிகாரம் கூட்டணி தவறை சரி செய்யுமென திலித் நம்பிக்கை



நேர்மையான திருட்டு எண்ணம் இல்லாத நபர்களையே தலைவர்களாக்க வேண்டும் என்று மக்கள் கோரினார்கள். ஆனால், சந்தர்ப்பவாதிகளும் பொய்காரர்களுமே மக்களுக்கு ஆட்சியாளர்களாக கிடைத்துள்ளதாக சர்வசன அதிகாரம் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற...
» 02 பக்கம்




## முஸ்லிம் காங்கிரஸில் எவரும் மக்களை பற்றி சிந்திப்பதில்லை

### ஏ. சி.எஹியாகான் தெரிவிப்பு



பாறுக் ஷிஹான்

முஸ்லிம் சமூகத்துக்கு எவ்வித பயனும் தராத, காணிகளை மீட்க திராணியற்ற, கல்முனை நகர அபிவிருத்திக்கு தடையாக இருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்பதை உணர்ந்து... » 02 பக்கம்

## பொலிஸ் மா அதிபரின்...

ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று (24) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோன் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா வாதங்களை முன்வைத்து தமது சேவைபெருநர் பொலிஸ் மா அதிபராக செயற்படுவதை இடைநிறுத்தி ஏற்கனவே இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த மனுவை விரைவாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள திகதி நிர்ணயிக்குமாறும் ஜனாதிபதி சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.

இதற்கமைய முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்ட நீதியரசர்கள் குழாம் இந்த மனு எதிர்வரும் மே மாதம் 06, 07 மற்றும் 08ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவு பிறப்பித்தது.

அரசியலமைப்பு சபையினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட பரிந்துரை சட்டத்துக்கு புறம்பானது என்றும் அதற்கமைய சட்ட மா அதிபரின் நியமனம் சட்டத்துக்கு புறம்பானது என்றும் தெரிவித்து பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் உள்ளிட்ட 09 தரப்பினர் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் தொடுத்திருந்தனர்.

முன்னதாக இதனுடன் தொடர்புடைய 09 மனுக்கள் கடந்த 2024 ஜூலை 24ஆம் திகதி ஆராயப்பட்டபோது விசாரணைகள் நிறைவடையும் வரை அமுலாகும் வகையில் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபர் பதவியில் செயற்படுவதை தடுத்து இடைக்கால உத்தரவும் நீதியரசர் குழாமினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, ஜனாதிபதி சார்பில் சட்ட மா அதிபர் சபாநாயகர் மற்றும் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனரா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

அத்துடன் இந்த தீர்மானத்தை எடுத்திருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியுள்ளமையால் அவரது விடுபாட்டுரிமை நிறைவடைந்ததால் அவரது பெயரும் பிரதிவாதி பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

## மூன்று கட்டங்களாக...

2025ஆம் ஆண்டுக்காக வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அரச அதிகாரிகளின் சம்பள குறைப்பு இடம்பெறாது. சுகாதாரத் துறையினரின் சம்பளத்திலும் குறைப்பு இடம்பெறாது. ஆய்வுக்கூட உத்தியோகத்தர்களின் மூன்றாம் தர அதிகாரிகளின் சம்பளமான 32,080 ரூபாவை 54,120 ரூபாவரையில் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கமைய, இவர்களுக்கான சம்பளமானது அண்ணளவாக 132,040 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று எம்.டி.8 வகை மூன்றாம் தர தாதியர்களுக்கான அடிப்படைச் சம்பளம் 32,525 ரூபா. 54,920 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதற்கமைய அவர்களின் சம்பளமானது 133,640 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்கூட உத்தியோகத்தர்களின் விசேட தரத்திலுள்ளவர்களின் அடிப்படைச் சம்பளம் 51,545 ரூபாவிலிருந்து 56,800 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. விசேட தாதியர் பிரிவிலுள்ளோருக்கு 54,235 ரூபாவிலிருந்து 86,800 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சாதாரண வைத்தியர் ஒருவருக்கான அடிப்படைச் சம்பளம் 54,290 ரூபாவிலிருந்து 94,150 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் சம்பள அதிகரிப்பு இடம்பெறவில்லை என்று எவராலும் கூற முடியாது.

அதேபோன்று, மேலதிக கொடுப்பனவுகளிலும் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சம்பள அதிகரிப்புகள் மூன்று கட்டங்களாகவே இடம்பெறும். ஏப்ரல் மாதத்தில் ஒரு கட்ட அதிகரிப்பு இடம்பெறும். 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் கட்ட அதிகரிப்பும் 2027 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மூன்றாம் கட்ட அதிகரிப்பு இடம்பெறும். 2027ஆம் ஆண்டே அடிப்படைச் சம்பள அதிகரிப்பு முழுமையடையும். ஆனால், 2027ஆம் ஆண்டு முழுமையடையும் சம்பள அதிகரிப்புக்கமையவே இந்த ஏப்ரல் மாதத்திலிருந்து மேலதிக கொடுப்பனவுகள் கணக்கெடுக்கப்படும் என்றார்.

## தேசிய மக்கள்...

உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியை மக்கள் நிராகரிக்கிறார்கள். எனவே, தேசிய மக்கள் சக்திக்கான மாற்றுத் தெரிவு சர்வசன அதிகாரம் கூட்டணியாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருணாகல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''மக்கள் விடுதலை முன்னணிக்கு என்னவானது. அறியாமையினால் பிறந்த நபர் அறியாமையினாலேயே இல்லாமல் போவார். அதனை இல்லாமல் செய்ய முடியாது. நூற்றுக்கு 3 சதவீதம் மாத்திரம் உரிமையான உணர்வே தவிர சாதாரண நபர் ஒருவருக்குள்ள உணர்வல்ல.

கௌரவமிக்க, நேசமிக்க அரசியல் செய்யும்போது இதுபோன்ற நிலை ஏற்படாது. தேசிய மக்கள் சக்தியினர் மக்களுக்கு சலித்துவிட்டனர். திசைக்காட்டியில்லை பதக்கமே சிறந்த தெரிவு என்று அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

மக்கள் கேட்ட விடயங்கள் பதக்கம் சின்னத்திடமே இருக்கிறது. நேர்மையான, திருட்டு எண்ணம் இல்லாத நபர்களை மக்கள் தேடினார்கள். ஆனால், சந்தர்ப்பவாதிகளும் பொய்காரர்களுமே மக்களுக்கு கிடைத்துள்ளார்கள். அதனை சரி செய்துகொள்ள வேண்டும். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக பதக்கம் சின்னத்தை வெற்றிப்பெறச் செய்வோம்'' என்றார்.

## தேசிய...

நெருக்கடி ஏற்படும் என்றும் பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் நேற்று (24) இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் பல்வேறு கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. பாதாள குழுத் தலைவர்கள் ஒருவருக்கொருவர் கொலை செய்துகொள்வதல்ல இதிலுள்ள பிரச்சினை. ஆனால், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் அப்பாவிக் குழந்தைகள் உயிரிழக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த பின்னணியில் அச்சத்துடனும் பயத்துடனுமே மக்கள் வீதியில் செல்ல வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் பாதுகாப்பு என்ற விடயத்தை கிடப்பில் போட்டுள்ளது. குற்றச்செயல்களை தவிர்த்துக்கொள்வதற்காகவே வீதி தடைகள் போடப்பட்டிருந்தன. ஆனால் அந்த வீதித் தடைகளை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் குற்றவாளிக்கு சாதக வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தேசிய பாதுகாப்புக்கும் பொதுமக்கள் பாதுகாப்புக்கும் புலனாய்வுத் துறை மிகவும் அவசியமாகும். ஒரு அசம்பாவிதம் இடம்பெற்றதன் பின்னர் மீண்டும் தவறு இடம்பெறாமல் தடுப்பதை விட, அசம்பாவிதம் இடம்பெறாமல் தடுப்பதே திறமையாகும். அதற்காகவே புலனாய்வு தகவல்களும் புலனாய்வுத் துறையும் பலமாக இருக்கவேண்டும்.

இராணுவப் புலனாய்வின் பணிப்பாளர், பிரதி பணிப்பாளர் உள்ளிட்ட அனுபவம் கொண்ட ஆறு பேரை இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் நீங்கியுள்ளது. சகலராலும் புலனாய்வு அதிகாரிகளாகிவிட முடியாது. அதற்கு அனுபவம், பின்னணி, விசேட திறன், கற்கை நெறிகளை முடித்திருக்க வேண்டும். அவ்வாறான புலனாய்வு அதிகாரிகளை நினைத்தது போன்று இடமாற்றம் செய்தால் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

பாதாள குழுத் தலைவர் கனேமுல்ல சஞ்சீவவை கம்பஹாவில் வைத்து கொலை செய்வதற்கான திட்டம் இருப்பதாக புலனாய்வு தகவல் கிடைத்திருந்தது. அதனாலேயே அந்த வழக்கு விசாரணையை கொழும்புக்கு மாற்றினார்கள். கொழும்புக்கு மாற்றினால் தவறு இடம்பெறாதா? எனவே இந்த விடயத்தில் பாரிய தவறு இடம்பெற்றுள்ளது என்றே கருதவேண்டும்.

தேசிய பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமையின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. பயங்கரவாதத்துக்கும் அப்பால் அடிப்படைவாத, சமய அடிப்படைவாதம் மற்றும் இனவாதம் என சகலவையும் தேசிய பாதுகாப்பில் தாக்கம் செலுத்தும். நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் நல்லிணக்கம் என்ற போர்வையில் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கருத்தில் கொள்ளாமையின் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரைக்கு முன்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிறிதரன் ஆகிய இரு பிரிவினைவாத தமிழ் அரசியல்வாதிகள் போராட்டம் செய்வது மாத்திரமல்லாமல் இனவாதத்தையும் தூண்டிக்கொண்டிருக்கிறார்கள். இனவாதத்துக்கு இடமளிக்க மாட்டோம் என்று ஜனாதிபதி கூறியிருந்தார். அவ்வாறெனில் கஜேந்திரகுமார் செய்வதெல்லாம் இனவாதம் இல்லையா. இவ்வாறான இனவாத செயற்பாடுகளுக்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க போகிறது. இந்த இனவாதத்துக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசாங்கம் பெரும் நெருக்கடிக்குள்ளாகும்.

பிரபுக்களின் பாதுகாப்பை குறைத்த அரசாங்கமே இன்று மீண்டும் பிரபுக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் பிரபுக்கள் யாராவது கொலை செய்யப்படுவார்களாக இருந்தால் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும். எனக்கு என்றால் பாதுகாப்பு அவசியமில்லை என்று ஜனாதிபதி அநுரவே கூறுகிறார். பாதுகாப்பு தொடர்பில் உள்ள இதுபோன்ற கவனமின்மையே இதுபோன்ற நிலைமைகளுக்கு காரணமாக அமையும் என்றார்.

## அரசியல்...

சகல நடவடிக்கைகளையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும். தற்போதுவரையில் நாட்டில் இடம்பெற்றுள்ள சம்பவங்களுக்கு விரைவாக பதிலையும் வழங்கியுள்ளோம். பதவிகளை கருத்திற்கொள்ளாமல் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக செயற்பட்டுள்ளோம். எனவே, இந்த விடயம் தொடர்பில் எவரும் பயங்கொள்ளவில்லை.

எதிர்த்தரப்பினருக்கு பேசுவதற்கு எதுவுமில்லாததால் ஏதாவதொரு சம்பவத்தை பிடித்துக்கொண்டு எதிர்ப்பு தெரிவிப்பார்கள். எதிர்த்தரப்பில் அநேகமானவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, எங்களை பலவீனப்படுத்த இதுபோன்ற கருத்துகளை கூறுகிறார்கள்.

ஆனால் அவர்களால் அந்த நோக்கத்தில் எங்களை வெற்றிக்கொள்ள முடியாது. நாங்கள் நாட்டு மக்களுக்கு பொய் செய்யவில்லை. நாங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பது மக்களுக்கு தெளிவாக தெரியும். தேசிய பாதுகாப்பு தொடர்பில் எந்த சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

தேசிய பாதுகாப்பு என்ற ஒரு விடயத்தை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றில் இடம்பெற்ற விடயங்களை நாங்கள் இன்னும் மறக்கவில்லை. தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தை கொண்டு அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளவும் அதிகாரத்துக்கு வரவும் மேற்கொண்ட செயற்பாடுகளை நாட்டு மக்கள் இன்னும் மறக்கவில்லை. அதனால் இதுவும் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஒரு சம்பவத்தை பயன்படுத்திக்கொள்வதை கண்டிருக்கிறோம். தேசிய பாதுகாப்புக்காக பாதுகாப்புப் பிரிவினர் சகல ஏற்பாடுகளையும் முன்னெடுப்பார்கள் என்று நம்புகிறோம் என தெரிவித்துள்ளார்.

## 76 ஆண்டு...

வரலாற்றில் சகலரும் தவறிழைத்துள்ளோம். 76 ஆண்டுகால சாபம் என்று கூறி தேசிய மக்கள் சக்தி தப்பிக்க முயற்சிக்கக்கூடாது. 76 ஆண்டு கால சாபத்தில் 51 சதவீத பங்கை மக்கள் விடுதலை முன்னணியினர் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்த உரையாற்றுகையில்,

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் திறந்த பொருளாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது என்பதும் எங்களுக்கு தெரிகிறது. அதனை ஏற்றுக்கொள்வதில் அரசாங்கத்திடம் சிறிய வெட்கமும் இருக்கிறது. அதனை ஏற்றுக்கொள்ளவும் முடியாது. அதுவே தற்போதுள்ள பிரச்சினையாகும்.

வரலாற்றை நினைவுகூர வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் கூறுவதாக ஆளுங்கட்சியினர் கூறுகின்றனர். வரலாற்றை பற்றி நாங்கள் பேசவில்லை. ஆனால் வரலாற்றை பற்றி சற்று சிந்தித்து பார்க்க வேண்டும். வரலாற்றில் பல்வேறு விடயங்களில் தவறிழைக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே நாடு இன்று நெருக்கடியை சந்தித்துள்ளது. வரலாற்றை பற்றி சிந்தித்தால் மாத்திரமே எமது தவறுகளை திருத்திக் கொள்ள முடியும். சரியான பாதையில் செல்ல முடியும்.

வரலாறு என்று கூறும்போது, நாட்டின் வரலாற்றில் தேசிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணிக்கு பங்கு இல்லை என்று கூற முடியாது. கறுப்பு வரலாறு இருக்கிறது. அதனை மூடி மறைக்க முடியாது. அது எங்களுக்கு தெரியும். சகலரும் தவறிழைத்துள்ளோம். 76 ஆண்டுகால சாபம் என்று கூறி தேசிய மக்கள் சக்தி தப்பிக்க முயற்சிக்க கூடாது.

76 ஆம் ஆண்டு கால சாபத்தில் 51 சதவீத பங்கை அரசாங்கத் தரப்பினரே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஹம்பாந்தோட்டை துறைமுகம் பற்றி பேசுகிறார்கள். திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் பற்றி பேசுகிறார்கள். ஆனால் கடந்த அரசாங்க காலப்பகுதியில் எண்ணெய்த் தாங்கிகளின் அபிவிருத்தி தொடர்பில் பேசியபோது ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தார். இன்று அந்த நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளார்கள். அதில் எந்த சிக்கலும் இல்லை. ஆரம்பத்திலேயே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டும் என்று கூறவில்லை. முன்னேற்றத்துக்கான அடித்தளத்தை இட்டுள்ளதாக அரசாங்கத்தினர் கூறுகிறார்கள். அதனை மறுக்கவில்லை. ஆனால் அந்த அடித்தளம் பலமாக இருக்க வேண்டும் என்பதே எங்களின் வேண்டுகோளாகும்.

பெருந்தோட்ட மக்களுக்காக 7,322 மில்லியன் ரூபாவை ஒடுக்கீடு செய்திருக்கிறார்கள். இதுதொடர்பில் வர்ண வேடிக்கையையும் செய்து கொண்டிருக்கிறார்கள். தோட்ட வீட்டு வசதிக்காக 3,500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த 3,500 மில்லியன் ரூபா என்பது இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள கடப்பாடாகும். இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில் 727 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. நவீன கற்கை வகுப்புகளுக்காக 600 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. தோட்ட உட்டகட்டமைப்பு வசதிக்காக 1,800 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மலையக இளைஞர்களின் தொழில்நுட்ப கற்கைக்கான பெரும் ஒதுக்கீடு செய்துள்ளது என்று கூறுகிறார்கள். ஆனால், அதற்கான ஏற்பாடுகள் எதுவும் பாதீட்டில் இல்லை. 7,322 மில்லியன் ரூபாவில் 4, 100 மில்லியன் ரூபா இந்திய அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை பற்றி மாத்திரம் பேசி தீர்வு காண முடியாது. சம்பளத்தினால் மாத்திரம் முன்னேற்றமடையவும் முடியாது. 1,700 ரூபாவை நிர்ணயித்து பெருந்தோட்டக் கம்பனிகளுடன் பேசுவோம் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். சம்பளப் பிரச்சினையை மாத்திரம் பேசிகொண்டிருக்காமல் தோட்ட முறையை மாற்றி முறை மாற்றத்தை செய்ய வேண்டும்'' என்றார்.

## சஞ்சீவவின்...

செயலாளர் பதவியில் ரவி செனவிரத்ன இருக்கும் வரை நாட்டின் பாதுகாப்பில் தொடர்ந்து அச்சுறுத்தல் நிலவுமென்றும் பிவிதுரு ஹெல உருமயவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கனேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிச் சூடு நடத்திய வாரத்துக்கு முதல் வாரம் கம்பஹா நீதிமன்றத்துக்கு அழைத்துவரும் சந்தர்ப்பத்தில் அவருக்கு துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கான ஏற்பாடுகள் இருப்பதாக தனக்கு தகவல் கிடைத்ததால் சஞ்சீவவை கம்பஹா நீதிமன்றத்துக்கு அழைத்து வராமல் 'சூம்' கலந்துரையாடலினூடாக நீதிமன்ற விசாரணைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருந்ததாக பதில் பொலிஸ் மா அதிபர் ஊடக சந்திப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

கம்பஹாவில் வைத்து கனேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிச் சூடு நடத்த யாராவது திட்டமிட்டிருந்தால், சஞ்சீவ மீதான கோபத்தினாலேயே அவ்வாறு திட்டம் தீட்டப்பட்டிருக்கும். அப்படியென்றால், கம்பஹாவில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்த திட்டமிடப்பட்டிருக்குமாக இருந்தால் கொழும்புக்கு அழைத்துவரும் போது நிச்சயமாக துப்பாக்கிச் சூடு நடத்த முயற்சிப்பார்கள் என்பதை புரிந்துகொள்ள அதிக புத்திசாலித்தனம் அவசியமில்லை. இதுதொடர்பில் தகவல் கிடைத்தும் கொழும்பில் வைத்து கனேமுல்ல சஞ்சீவவை கொலை செய்வதற்கு இடமளித்து பதில் பொலிஸ் மா அதிபர் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்துள்ளார்.

கஞ்சீவவின் கொலைச் சம்பவத்தில் பதில் பொலிஸ் மா அதிபரும் தொடர்புபட்டுள்ளாரா என்ற சாதாரண சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது. எனவே, சஞ்சீவவின் கொலைத்திட்டம் தொடர்பில் தகவல் கிடைத்தும் அதுதொடர்பில் முன்னேற்பாடுகள் எதனையும் செய்யாதது தொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபரிடம் விசாரணையை முன்னெடுக்க வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவே இந்த விசாரணையை முன்னெடுக்க வேண்டும். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்தும் இரு வாரங்கள் வரையில் அதுதொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காத ரவி செனவிரத்னவுக்கே இந்த பொறுப்பு உரித்தாகியுள்ளது. அதனால் ரவி செனவிரத்ன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருக்கும்வரை பொலிஸாருக்கு தகவல் கிடைத்தும் அதுதொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலையை எப்போதும் சரிசெய்ய முடியாது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்க் கட்சியிலிருந்தபோது ஒரு ஆரோக்கியமான சமூகத்தில் நபரொருவர் உயிர் வாழ வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிக்கும் அதிகாரத்தை பொலிஸ் மா அதிபருக்கோ பொலிஸ் அமைச்சருக்கோ வழங்க முடியாது. அந்த அதிகாரம் நீதிமன்றத்துக்கு மாத்திரமே வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அவ்வாறான நிலைப்பாட்டிலுள்ள ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில், பொலிஸ் பாதுகாப்பிலிருக்கும் சந்தேகநபரொருவர் உயிரிழக்கிறார் என்றால் ஆயுதத்தை காட்டி முன்னெடுக்கப்படும் நாடகம் அவரது அரசாங்கத்திலும் முன்னெடுக் கப்படுகின்றது என்றால் பொலிஸ் துறை அமைச்சர் ஜனாதிபதி கூறுவதைக் கூட செவிமடுக்கிறார்கள் இல்லை என்பதே தெரிகிறது. ஜனாதிபதியினால் பொலிஸ் துறை அமைச்சரைக் கூட கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியவில்லை.

இந்த நிலைமையில் எமது சகலரதும் உயிர் பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருக்கிறது. அரசாங்கம் தொடர்பில் நாங்கள் தொடர்ச்சியாக தர்க்க ரீதியான விமர்சனங்களை முன்வைப்பதால் இந்த அரசாங்கத்துக்கு நாங்கள் தலைபாரமாக மாறியுள்ளோம். அதனால் கனேமுல்ல சஞ்சீவவின் கொலைச் சம்பவத்தில் என்னையும் கைதுசெய்து ஆயுதங்களை காண்பிக்க அழைத்துச் சென்றதாக தெரிவித்து வாழ்க்கையில் பொம்மை துப்பாக்கியில் கூட துப்பாக்கிச் சூடு நடத்தாத நான் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக கூறி சுய பாதுகாப்புக்காக என்னைக் கொலை செய்ய நேர்ந்ததாக பதில் பொலிஸ் மா அதிபர் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் காலம் தொலைதூரத்தில் இல்லை. எனது உயிர் பாதுகாப்பு மாத்திரமல்ல முழு நாட்டு மக்களதும் பாதுகாப்பு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது என்றார்.

## முஸ்லிம்...

நான்கு ஆண்டுகளாக சிந்தித்துக் கொண்டிருந்து இப்போது அங்கிருந்து வெளியேறியிருக்கிறேன். என்னுடைய பிரதிப் பொருளாளர் பதவி அடங்களாக கட்சியின் பதவிகளை இதுவரை துறக்கவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்பினால் என்னை நீக்கிக்கொள்ளட்டும்'' என ஐக்கிய மக்கள் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஏ.சி.எஹியாகான் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் ஐக்கிய மக்கள் காங்கிரஸின் அலுவலகத்தை நேற்றுமுன்தினம் (23) திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் பேசிய அவர்,

''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் அமைச்சராக இருந்தும் கல்முனைக்கு எவ்வித அபிவிருத்திகளும் நடக்கவில்லை. கல்முனையை அபிவிருத்தி செய்ய முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் எடுத்த எத்தனங்களை அவர்களே தடுத்தார்கள். கடந்த பொதுத்தேர்தலிலும் தங்களின் ஆமாம் சாமிகள் அவர் கூட தேர்தலில் களமிறங்கினால் அவர்கள் தோற்று ஹரீஸ் வென்றுவிடுவார் என்பதற்காக ஹரீஷை தேர்தலில் களமிறங்க விடாமல் சதி செய்து தடுத்தார்கள். இந்த முஸ்லிம் காங்கிரஸில் யாரும் மக்களை பற்றி சிந்திக்க முடியாது. அவ்வாறு சிந்தித்தவர்கள் வெளியேறிவிட்டார்கள். அல்லது வெளியேற்றப்படுகிறார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் கடந்த 15 வருடங்களாக இணைந்து பயணித்துள்ளேன். மறைந்த மாபெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் இந்த கட்சியை எமது சமூகத்தின் இருப்புக்காகவும் பிரதேச அபிவிருத்திக்காகவும் உருவாக்கினார். ஆனால் இப்போதுள்ளவர்கள் தமது கஜானாக்களை நிரப்புவதற்காக இதனை பாவித்து வருகின்றனர். நான் இக்கட்சியினால் பல்வேறு வெட்டுக் குத்துகளையும் ஏமாற்றங்களையும் நேரடியாக சந்தித்தவனாக காணப்படுகின்றேன். எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு எந்த எண்ணமுமில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏமாற்று அரசியலை செய்து வருகின்றது.

கூஜா தூக்கிகளுக்கு சாமரம் வீசும் வேலையை செய்வதையே முஸ்லிம் காங்கிரஸ் தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இதனால் தான் மக்கள் அவர்களையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸையும் இன்னும் பல பாரம்பரிய கட்சிகளையும் நிராகரித்து தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரண்டார்கள். நாங்களும் அவர்களுக்கு தேவையாயின் ஒத்துழைப்பு நல்க தயாராக இருக்கிறோம். எங்கள் தொகுதிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் எம்.பிக்கு ஆலோசனை வழங்கத் தயாராக இருக்கிறோம். எங்களுடன் ஒன்றாக இருந்த துரோகிகள் எங்களை பல இடங்களில் காட்டிக்கொடுத்து பதவிகளை பெற்றுக்கொண்டார்கள்.

எனவே தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி நாட்டை நேசிக்கும் சிறந்த மக்கள் தலைவரும் அரசியல் செயற்பாட்டாளருமான முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தலைமையில் உருவாகியுள்ள குறித்த கட்சியின் பொதுச்செயலாளராக மக்களுக்கு சேவையாற் றவுள்ளேன்.

ஐக்கிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் காரியாலயங்களில் ஒன்று சாய்ந்தமருதில் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அநேகமான கட்சிகள் மீது மக்கள் வெறுப்புற்றுள்ளதாகவும் மக்களது நலனுக்காக மக்களது வாக்குகளைப் பெற்று எதிர்க்கட்சிகளில் இருக்கும் சில அரசியல்வாதிகள் அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்க்கும் மனோ நிலையில் இருப்பதாகவும் அவ்வாறான நிலை மாறி நாட்டையும் மக்களையும் பற்றி யோசிக்க கூடிய சிறந்தவர்கள் தங்களது கட்சியின் பக்கம் அணிதிரள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களிலும் திருகோணமலை உட்பட இன்னும் சில மாவட்டங்களிலும் நாங்கள் களமிறங்க தயாராகி வருகிறோம். சுசந்த புஞ்சிநிலமே பிரதி அமைச்சராக இருந்த காலங்களில் இன, மத வேறுபாடின்றி அனைத்து மக்களதும் நாட்டினதும் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டவர். எனவே நாட்டுப்பற்றுள்ள அனைத்து மக்களும் இன, மத பேதமின்றி தங்களுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு ஐக்கிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.சி.யஹ்யாகான் தெரிவித்தார்.

## குற்றச் செயல்களுக்கு...

தப்பிச்சென்ற இராணுவ அதிகாரிகள், பாதாளக் குழுவினருடன் தொடர்புகொள்வது தொடர்பில் அதிக ஆர்வம் செலுத்தும் போக்கு இருக்கின்றமையை விசாரணைகளினூடாக உறுதிப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அவ்வாறானவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டிருக்கிறோம். இரு வருடங்கள் வரையான குறுகிய காலப்பகுதிக்குள் ஆயுதப் பயிற்சிகளை பெற்றுக்கொண்டு வெளியேறியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் பாதாளக் குழுக்களுடன் தொடர்புபடும் போக்கு அதிகமாகும். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் அவர்களை கைதுசெய்யவும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம்.

இதுவரையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானவர்கள் இவ்வாறு இராணுவத்தை விட்டு வெளியேறியுள்ளனர். இது சமூகப் பிரச்சினையாகும். பாதாள செயற்பாடுகளுக்கு எந்தவொரு அரசியல் பாதுகாப்பும் இதுவரையில் கிடைக்கவில்லை என்பதுடன் துப்பாக்கிகள் தொடர்பில் கணக்காய்வுகளை முன்னெடுத்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானவற்றை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## உள்ளூராட்சி...

நியமிக்கப்பட்டு அவர்களின் பெயர்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அனைத்து மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேசசபைகளின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் ஒழுங்குமுறை சட்டமூலம் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல் ஆணையாளர், சட்டத்தரணி சிந்தக்க குலரத்ன ஆகியோர் தேர்தல் பிரசாரம் மற்றும் வரவு - செலவு திட்டமிடும் விதம் தொடர்பில் அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதேவேளை, வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நிறைவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறும் கட்சிகளின் செயலாளர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துமாறும் எதிர்க்கட்சிகள் கோரியுள்ள நிலையில், 27ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையின்போது இந்த விடயங்கள் குறித்தும் கருத்திற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மாசி மாதம் 13ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** நீங்கள் விரும்பிய தொழில் மாற்றம் அமையும். வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள்.

**ரிஷபம்** ஆலய தரிசனத்தால் மன நிறைவு அடைவீர்கள். தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**மிதுனம்** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**கடகம்** எதிர்பாராத வகையில் உங்கள் புகழ், அந்தஸ்து உயரப் போகின்றது. அரச வகையில் இலாபம் உண்டு.

**சிம்மம்** கலங்கிப் போயிருந்த மனம் ஆறுதல் அடையப் போகின்றது. இன்றைய நாள் உங்களுடையது. நல்லதையே நினையுங்கள்.

**கன்னி** அரச உயர் அதிகாரிகளை வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள். ஆழம் அறியாது காலை விடாதீர்கள்.

**துலாம்** உண்மையான உறவு என்ன என்பதை கற்றுக் கொள்ளப் போகின்றீர்கள். முயற்சிகள் எடுத்தாலும் தடைகள் உண்டு.

**விருச்சிகம்** மற்றவர்கள் முடியாது என்று கைவிட்ட செயலை இலகுவில் முடித்துக் காட்டு வீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**தனுசு** குடும்பத்துக்கான செலவுகளை இன்று நீங்கள் பொறுப்பேற்பீர்கள். குதர்க்க வாத விவாதங்களை தவிருங்கள்.

**மகரம்** உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாக வும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கும்பம்** கணவன் - மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். உணவு, உறக்கம் தடைபடும் நாள்.

**மீனம்** அரசாங்க வகையில் பல சலுகைகள் நீங்கள் கேட்காமலேயே கிடைக்கும். மூத்தவர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள்.

| | |
|---|---|
| **திதி:** | துவாதசி பி.ப.12.47 வரை பின் திரயோதசி |
| **நட்சத்திரம்:** | உத்திராடம் மு.இ.6.30 வரை பின் திருவோணம் |
| **பிறை:** | தேய்பிறை |
| **யோகம்:** | சித்த யோகம் மு.இ.8.02 வரை பின் மரண யோகம் |
| **வார சூலை:** | வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்:** | காலை- 8.24 – 9.24 மணிவரை பகல் -12.24 – 1.24 மணிவரை மாலை- 4.54 – 6.54 மணிவரை |
| **ராகு காலம்:** | 3.24 – 4.54 மணிவரை |
| **எமகண்டம் :** | 9.24 – 10.54 மணிவரை |
| **குளிகை :** | 12.24 – 1.54 மணிவரை |
| **சந்திராஷ்டமம்:** | மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**
**இன்று முன்னிரவு 6.30 மணிவரை**
பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முன்னிரவு 6.30 மணிக்குமேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விசேட தினம்:** பிரதோஷ விரதம்



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# ரயில் – யானை மோதலில் சாரதிகள் மீது குற்றச்சாட்டு: முறையான தீர்வு காணாவிடில் பணியிலிருந்து விலக நேரிடும்

## இலங்கை ரயில்வே எஞ்சின் சாரதிகள் சங்கம் அறிவிப்பு

ரயில் மோதலில் யானைகள் இறக்கும் சம்பவங்கள் தொடர்பாக ரயில் சாரதிகள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை இலங்கை ரயில்வே எஞ்சின் சாரதிகள் சங்கம் கண்டித்துள்ளது.

இது குறித்து இலங்கை ரயில்வே எஞ்சின் சாரதிகள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கையில்,

மீனகயா ரயிலில் மோதி 06 யானைகள் இறந்த சம்பவத்தில், ரயில் - யானை மோதலுக்கான காரணம் குறித்து நன்கு ஆராயாமல் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் ரயில்வே எஞ்சின் சாரதிகள் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கல்ஓயா போன்ற யானைகள் அதிகம் உள்ள பகுதிகளிலிருந்து, குறிப்பாக பொருட்கள் மற்றும் எரிபொருளை ஏற்றிச் செல்லும் கனரக இரவு ரயில்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான இரவு ரயிலில் மோதிய யானைகள் இறந்த பல சம்பவங்கள் சமீபத்தில் பதிவாகியுள்ளன.

கல்ஓயா முதல் மகாஓயா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு வரையான யானைகள் அதிகமுள்ள பகுதிகள் வழியாக ரயில்கள் பயணிக்கும்போது கூடுதல் பாதுகாப்பை உறுதிசெய்ய தொழிற்சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

“இந்தப் பிரச்சினைக்கு குறுகிய காலத் தீர்வுகளைத் தேடும்போது, யானை-ரயில் மோதலுக்கு பங்களிக்கும் மூன்று முக்கிய காரணிகள் உள்ளன. இவற்றில் ரயிலின் எடை, ரயிலின் வேகம் மற்றும் சூழல் என்பன செல்வாக்கு செலுத்துகின்றன. இவற்றைத் தடுக்க முடியாது. குறிப்பாக ரயிலின் வேகத்தைத் தடுக்க முடியாது.

ரயில் தண்டவாளங்களுக்கு அருகிலுள்ள யானைகள் குறித்து என்ஜின் சாரதிகளுக்கு உடனடித் தகவல் வழங்குதல் மூலம் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்கலாம். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவரும் ஒரு அறிவியல் தீர்வைத் தேட வேண்டும்.

பொதுமக்களின் சலசலப்பு காரணமாக நியாயமற்ற தீர்வு காணப்பட்டால், இலங்கை ரயில்வே என்ஜின் சாரதிகள் சங்கம் இரவு ரயில்களை இயக்குவதிலிருந்து விலக வேண்டிய கட்டாயம் ஏற்படும் – என்றார்.

# சீன மக்கள் தொடர்பு அமைச்சர் பான் யுவே பேராதனை பல்கலைக்கழகத்துக்கு விஜயம்



(எம்.ஏ.அமீனுல்லா)

கல்வி மற்றும் கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்தும் வழிகளை ஆராய்வதற்காக சீன அரசாங்கத்தின் சர்வதேச மக்கள் தொடர்பு அமைச்சர் பான் யுவே (Pan yue) பேராதனை பல்கலைக்கழகத்துக்கு சென்றுள்ளார்.

பல்கலைக்கழகத்துக்கு சென்றுள்ள அமைச்சர் பான் யூ, உடன் பதில் துணைவேந்தர் பேராசிரியர் ரஞ்சித் பல்லேகம மற்றும் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் - பதில் பிரதி துணைவேந்தரும் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் லிலந்த சமரநாயக்க, சர்வதேச உறவுகள் அலுவலகப் பணிப்பாளர் பேராசிரியர் சஞ்சீவ மலவியாரச்சி மற்றும் நுண்கலைத்துறையின் பேராசிரியர் லீனா செனஹவீர ஆகியோர் கலந்துரையாடல்களில் கலந்துகொண்டனர்.

இரு தரப்பினரும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் எதிர்கால கூட்டுத் திட்டங்கள், மாணவர் பரிமாற்றங்கள் மற்றும் இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் கலாசார முன்முயற்சிகளுக்கு வழிவகுக்கும் வலுவான தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

# மனிதப் பாவனைக்குதவாத 80 இலட்சம் பெறுமதியான உணவுப் பொருட்கள் அழிப்பு





(கலஹா செய்தியாளர்)

கம்பளை நகரில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடியிலிருந்து பொது சுகாதார அதிகாரிகளினால் மனித நுகர்வுக்கு தகுதியற்ற 80 இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுடைய பல உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதவான் காஞ்சனா கொடித்துவக்குவின் உத்தரவின்பேரில் நேற்று (24) அவை அழிக்கப்பட்டன.

இதனையடுத்து, அதிகாரிகள் கடை உரிமையாளருக்கு எதிராக கம்பளை நீதிமன்றத்தில் காலாவதியான உணவை விற்பனை செய்தல், காட்சிப்படுத்துதல், சேமித்தல், சரியான வெப்பநிலையில் சேமிக்காமல் இருத்தல், ஆரோக்கியத்துக்கும் பாதுகாப்புக்கும் தீங்கு விளைவிக்கும் சூழ்நிலையில், பராமரித்தல் உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டின் கீழ் வழக்கு தொடர்ந்தனர்.

இதன்போது உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கமைய, அவருக்கு 23 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு, குறித்த உணவுப் பொருட்களும் அழிக்கப்பட்டன.

எனினும், மேலும் ஒரு தொகுதி பொருட்களுக்கு குற்றத்தை ஒப்புக்கொள்ளாததையடுத்து வழக்கு தொடர்ந்து இடம்பெற்று வந்த நிலையில், அவர் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டதோடு, சந்தேக நபரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன், நீதிபதி அவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்தார்.இதையடுத்தே மேற்குறிப்பிட்ட மனிதப் பாவனைக்கு உதவாத பொருட்கள் அழிக்கப்பட்டமையும் குறிப்பிட்டத்தக்கது.

# பூர்வீகக் குடிமக்களுக்கு தேர்தல் இணைய சேவைகளை அறிமுகப்படுத்தும் நிகழ்வு



தேர்தல் இணைய சேவைகள் குறித்து பூர்வீகக் குடிமக்கள் மற்றும் பூர்வீகக்குடி பள்ளி மாணவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்வு தம்பானை கனிஷ்ட பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

தேர்தல் ஆணையகத்தின் தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பப் பிரிவும் பதுளை மாவட்ட தேர்தல் அலுவலகமும் இணைந்து தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மற்றும் பூர்வீகக் குடிமக்களின் தலைவர் ஊருவரிகே வன்னிலா அத்தோ ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்றது.

அரசு அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களுடன் பூர்வீகக் குடிமக்கள் தொடர்பு கொள்ளும்போது மொழி வேறுபாடுகள் காரணமாக ஏற்படும் பிரச்சினைகள், வாக்காளர் பட்டியலில் பதிவுசெய்வதில் உள்ள சிக்கல்கள், வாக்காளர் பட்டியல் தகவல்களைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள், தேர்தல் செயல்முறை பற்றிய குறைந்த விழிப்புணர்வு போன்றவற்றுக்கு தேர்தல் ஆணையகம் மேம்படுத்தியுள்ள தேர்தல் இணைய சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் தீர்வு கிடைக்கும்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 பெப்ரவரி, 25ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# வரவேற்கப்படவேண்டிய அரசாங்கத்தின் அறிவிப்பு

பாதுகாப்புப் படைகளிலிருந்து தப்பியோடியவர்களை உடனடியாகக் கைதுசெய்யுமாறு பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்கள் தொடர்பில் பாதுகாப்புச் சபை கூடி நேற்று (24) காலை ஆராய்ந்தது. அதன் பின்னர் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஆயுதப் பயிற்சி பெற்ற ஆயுதப்படை வீரர்கள் முப்படைகளை விட்டு வெளியேறி குற்றச் செயல்களில் ஈடுபடுவது அல்லது பாதாள உலகக் குற்றக் கும்பல்களில் சேர்வது போன்ற போக்கு காணப்படுவதாக பாதுகாப்புச் செயலாளர் கடந்த சனிக்கிழமை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும், அத்தகைய நபர்களைக் கைதுசெய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இராணுவம் மற்றும் பொலிஸ் ஆகிய இரண்டிலும் ஆயுதப் பயிற்சியுடன் வெளியேறுபவர்களைக் குறுகிய காலத்துக்குள் கண்டுபிடித்து கைதுசெய்யுமாறும் வலியுறுத்தியிருந்தார்.

குற்றவியல் குழுக்களுடன் இராணுவ வீரர்களும் தொடர்பு கொண்டுள்ளார்களா என்று ஒரு பத்திரிகையாளர் வினவியபோது, பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் போதைப்பொருள் பழக்கம் காரணமாக சில வீரர்கள் குற்றவாளிகளுடன் தொடர்பு வைத்திருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்ட பாதுகாப்புச் செயலாளர் எதிர்காலத்தில் இதுபோன்ற இராணுவ வீரர்களை அடையாளம் கண்டு கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென்று உறுதியளித்திருந்தார். அதன்படியே நேற்று இந்தப் பணிப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளரின் இந்த நடவடிக்கை மிகவும் வரவேற்கத்தக்கது. இது சரியான நடவடிக்கையென்பதை அச்சமின்றிக் குறிப்பிடலாம். ஆனாலும், சொல்வதைப்போல இது நடைமுறைக்குச் சாத்தியமானதா என்பதும் பார்க்கப்படவேண்டும். இராணுவம் மற்றும் முப்படைகளிலிருந்து தப்பியோடிய 20,000 முதல் 25,000 வரையான பலர் நீதிக்குப் புறம்பான பாதகச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களோடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கும் ஒட்டுக் குழுக்கள் இயங்குகின்றன. இவர்களைக் கட்டுக்குள் கொண்டுவருவது இலகுவான காரியமல்ல. இதற்கு நிச்சயமாக அதன் பின்னணியிலுள்ள சக்திகள் அனுமதிக்கப்போவதில்லை.

கடந்த வருடம் இராணுவத்தினருக்கு பொதுமன்னிப்பு வழங்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. குறித்த காலப்பகுதியைப் பயன்படுத்தி உரிய முறையில் இராணுவத்திலிருந்து விலகுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

பொதுமன்னிப்புக் காலப்பகுதியில் உரிய முறையில் சேவையை மீண்டும் தொடர்தல் அல்லது சட்டரீதியாக சேவையிலிருந்து விலகுதல் உள்ளிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமென பாதுகாப்பு அமைச்சு அப்போது தெரிவித்திருந்தது. அந்தப் பொது மன்னிப்புக் காலத்தின் முதல் வாரத்தில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வெளியேறியிருந்தனர். அப்படியாக வெளியேறியவர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் நாட்டில் உள்ளார்களா என்பதைப் பற்றிய தரவுகள் அரசிடம் இருக்கின்றனவா என்பது தெரியவில்லை.

அண்மைக்காலமாக நடக்கும் வன்முறைச் சம்பவங்களை நோக்குவோமானால் அவற்றுக்கு படையினர் பயன்படுத்தும் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை புலனாகிறது. அதுமட்டுமல்லாமல், படைமுகாம்களில் விடுமுறை எடுத்துவிட்டு வரும் சிப்பாய்கள் குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டு மீண்டும் படைமுகாம்களுக்குள் சென்றுவிடும் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. பாதுகாப்புப் படைகளுக்கப்பால் பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றித் தப்பியோடி மறைந்திருக்கும் உத்தியோகத்தர்கள்கூட குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டுள்ளமை அம்பலமாகியிருக்கிறது.

பாதுகாப்புச் செயலாளர் விடுத்திருக்கும் அறிவிப்பால் குற்றச் செயல்கள் குறையும் வாய்ப்பே இருக்கிறது. ஆனால், இப்போது அமைதியாக இருந்துவிட்டு காலப்போக்கில் குற்றச்சம்பவங்களில் தப்பியோடிய படையினர் ஈடுபடலாமென்பதால் இந்த விடயத்தில் தயவு தாட்சண்யம் பார்க்காமல் பாதுகாப்புச் செயலர் செயற்படவேண்டும். படைகளிலிருந்து தப்பியோடியவர்கள் தொடர்பில் தகவல் இருக்குமாயின் அது தொடர்பான தகவல்களை பாதுகாப்புத் தரப்பினருக்குக் கொடுக்கவேண்டியதும் நாட்டை நேசிக்கும் மக்களின் பொறுப்பாகும்.

## இன்றைய நாளில்...

- 1836 – சாமுவேல் கோல்ட் சுழல் துப்பாக்கிக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1932 – ஹிட்லர் ஜேர்மனியின் குடியுரிமையைப் பெற்றார். இதன் மூலம் 1932 அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றார்.
- 1986 – பிலிப்பைன்ஸ் தலைவர் பேர்டினன்ட் மார்க்கோஸ் மக்கள் புரட்சியையடுத்து தமது 20 ஆண்டுகள் ஆட்சியைக் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார். கொரசோன் அக்கீனோ அரச தலைவரானார்.
- 2007 – ஈசாவின் ரோசெட்டா விண்கலம் முதன்முதலாக செவ்வாய்க்கிரகத்தை 150 மைல் உயரத்தில் மிக அருகே சுற்றிவந்து அதன் சுழல்வீச்சுக்கப்பால் எறியப்பட்டது.

# ஆபத்துகளை புரிந்துகொள்ளுங்கள்!

இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அண்மையில் எழுதியிருந்த கடிதத்தில், 'புதிய அரசியல் தீர்வு குறித்துக் கலந்துரையாடுவதற்கு இது பொருத்தமான நேரமல்ல' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இங்கே புதிய தீர்வுத்திட்டம் குறித்துப் பேசுதல் என்பது இனப்பிரச்சினை தீர்வுக்காகப் பேசுதல் என்றே அர்த்தம்கொள்ளப்படல் வேண்டும். ஏனெனில், புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படுவதே இங்கு இனப்பிரச்சினை என்ற ஒன்று இருப்பதனால்தானே. ஆகவே, புதிய அரசியலமைப்பு குறித்துப் பேசுவதற்கு உரிய நேரம் இதுவல்ல எனக் கூறுவதில் இருக்கின்ற இன்னொரு அர்த்தம் இனப்பிரச்சினை குறித்துப் பேசுதலுக்கு இது உரிய நேரமல்ல என்பதுதான்.

ஆனால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய அரசியலமைப்பு பற்றிப் பேசுவதற்கு இதுதான் மிகப் பொருத்தமான நேரம். அதற்கான காரணங்களைப் பார்க்கலாம்.

01. தமிழரசுக் கட்சி குறிப்பிட்ட அதே விடயத்தைத் தான் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஜே.வி.பி. அரசாங்கமும் கூறியிருந்தது. நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை பெரிதாக இருப்பதனால் அதனை முதல் தீர்த்துவிட்டு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய அரசியலமைப்பு விடயம் பற்றிப் பேசலாம் என்றது ஜே.வி.பி.

ஆட்சியைப் பிடிக்கும் வரையில் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவந்து இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டுத்தான் அடுத்த வேலை எனப் பரப்புரை செய்துவந்த ஜே.வி.பி., தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் கைவிட்டுள்ளது. சரி, இப்போது பொருளாதார வீழ்ச்சிதான் முதன்மைப் பிரச்சினையெனில் அதனைத் தீர்ப்பதற்குரிய கால எல்லை எவ்வளவு? வரவு - செலவுத் திட்ட அறிமுக உரையில் ஜனாதிபதி குறிப்பிட்டதுபோல 5% வளர்ச்சியை 2028 ஆம் ஆண்டுக்குள் அடைவீர்களென்றால், (பொருளாதார நிபுணர்கள் 3% வளர்ச்சியை அடைவதே சிரமமானது என்கிறார்கள். வாயில் வடை மட்டுமல்லாது, போண்டாவையே அவிக்கும் ஜே.வி.பிக்கு இப்படி வாக்குறுதிகளை அடித்துவிடுவது சிரமமானதல்லவே) அதனை எவ்விதத்தில் அடைவீர்கள்? பொருளாதார முன்னேற்றத்துக்கான வழிமுறையைக் கண்டுபிடிக்க வேண்டுமாயின் பொருளாதார வீழ்ச்சிக்கான சரியான காரணத்தை முதலில் கண்டுபிடிக்கவேண்டுமல்லவா?

இனப்பிரச்சினை தானே இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கான பிரதான காரணம். எனவே, அதனைத் தீர்க்காமல் எப்படி பொருளாதாரப் பிரச்சினையை ஜே.வி.பி. தீர்க்கப்போகின்றது? ஆகவே, ஜே.வி.பியின் இந்தக் காலங்கடத்தும் - இனப்பிரச்சினையை தீர்ப்பதில் விருப்பின்றி செயற்படும் வேலையைத் தமிழர் தரப்பெனச் சொல்லிக்கொண்டிருக்கின்ற இலங்கை தமிழரசுக் கட்சியும் சேர்ந்து செய்கின்றதா?

02. தமிழர் விடயத்தில் ஜே.வி.பியின் உண்மை எதுவென்பதை 1990களுக்கு முன்பு பிறந்த அனைவருமே அறிவர். வன் இனவாதத்தில் அதன் பயணம் ஆரம்பித்து, இன்று மென் இனவாதத்தில் வந்துநிற்பதையும் அனைவரும் அறிவர். ஆகவே, இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை என்கிற நிலைப்பாட்டில் தான் அது உள்ளது. இங்கு மதவாத- ஊழல் சார்ந்த பிரச்சினைகளே உள்ளன. அதனைத் தீர்த்தால் எல்லாம் சரியாகிவிடும் எனக் கருதுகின்றது. இந்த விடயங்கள் மேலோட்டமான - கவர்ச்சிகரமான அரசியல் பின்னணியோடு சொல்லப்படுவதால் 1990களுக்குப் பின்னர் பிறந்த தலைமுறையினர் மத்தியில் இலகுவாக எடுபடுகின்றது.

பல்லினங்கள், பல்மதங்கள் நிலவுகின்ற இடத்தில் பௌத்தத்துக்கு முதன்மையிடம் எனச் சட்டம் இயற்றி வைத்துக்கொண்டு மதவாதத்தைக் கையில் வைத்திருப்பதும் அரசுதான். ஊழலை தலைமையேற்று நடத்தியவர்களே அரசை வழிநடத்திய அரசியல்வாதிகள்தான். எனவே, தன்மீது முழுத்தவறையும் வைத்துக்கொண்டு மேற்குறித்த இரண்டு பிரச்சினைகளும் மக்களிடம்தான் உள்ளன. அதுதான் இங்கு பிரதான பிரச்சினை எனக்காட்ட முனைவது ஜே.வி.பியின் இனவாத அரசியலின் மென்முகம். எனவே, இங்கு உண்மையான பிரச்சினை திட்டமிட்ட ரீதியில் மறைக்கப்படுகின்றது. அரசியலரங்கிலிருந்து நீர்த்துப்போகச் செய்யப்படுகின்றது. எனவேதான் இனப்பிரச்சினைதான் இங்குள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமென்பதை திரும்பத் திரும்ப நினைவுபடுத்தி அதனைப் பற்றிப் பேசவேண்டியிருக்கின்றது.

03. அடுத்து தமிழ் சமூகத்தின் அரசியல் பங்குபற்றல் வெகுவாகக் குறைந்துவரும் காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். ஆயுதப் போராட்டம் கொண்டுவந்து, முக்கியமான புள்ளியில் நிறுத்திய இன விடுதலைக்கான அரசியலை அதற்குப் பின்பான தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் சரியாக நகர்த்தவில்லை. தெற்குக்கும் பிற நாடுகளுக்கும் விலைபோன தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ்த் தேசிய அரசியல் குறித்த அதிருப்தியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றனர். இதனால் அதிருப்தியும் வெறுப்புமடைந்த தமிழர்கள் தெற்கின் அரசியல் நீரோட்டத்தோடு கலந்துவிடலாம் என்கிற முடிவுக்கும் வந்துள்ளனர்.

எனவேதான் இங்கு களத்தில் நிற்கின்ற அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இதயசுத்தியுடன் மக்களை ஆற்றுப்படுத்தவேண்டிய தேவை எழுந்திருக்கின்றது. இந்த ஆற்றுப்படுத்தலில் அனைவரையும் இணைக்கக்கூடிய விடயமாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் அமையலாம். பிளவுண்டு கிடக்கிற தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஒரு புள்ளிக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் வேறெந்த விடயங்களிலும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளாக ஓரணியாகத் திரள்வது நல்லதொரு சமிக்ஞை. அந்த சமிக்ஞை, பிளவுண்டு கிடக்கிற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் அதிருப்தியுற்றிருக்கின்ற தமிழ்த் தேசிய அரசியலில் பங்குபற்றலும் பற்றுமுடைய தமிழர்களுக்கும் நம்பிக்கை தருகின்ற வெளிச்சமாக மாறும்.

04. அர்ச்சுனா வகையறா அரசியலின் செல்வாக்கும் தமிழர்கள் மத்தியில் குறிப்பாக, புதிய வாக்காளர்கள் மத்தியில் மேலோங்கி வருகின்றது. தனியார் காணியில் அவர்களது அனுமதியின்றி இராணுவ பகைப்புலத்தோடு அமைக்கப்பட்ட பௌத்த விகாரையை அகற்றிவிட்டுக் காணியை உரிமையாளர்களிடம் கையளியுங்கள் என்று கோரினால், மீண்டும் 1983 ஜூலை கலவரம் ஏற்படுமென யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சொல்வதைக் கொண்டாடவும் அதனை ஒரு நியாயமான நிலைப்பாடாக ஏற்பதற்குமான தொண்டர்கள் உருவாகியிருக்கிறார்கள். தமிழர்களை இலங்கையின் தலைநகரிலிருந்து முற்றாக அகற்றும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இனச்சுத்திகரிப்பைக்கூட தமிழர்களில்தான் முழுப்பிழையும் என்கிறமாதிரி இந்த பௌத்தமயமாக்கல் பிரச்சினையை மடைமாற்றியிருக்கிறார் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்.

இது இந்த இனம் இதுவரைகாலமும் **வரித்துவந்த** அரசியலுக்குத் துரோகமிழைக்கும் செயல். இந்த இனம் சுமந்த அத்தனை வலிகளையும் அரசியல் வியாபாரமாக்கும் முயற்சி. கவர்ச்சிமிகு ஊடக உரையாடல்கள் மூலம் எடுத்துச்செல்லப்படும் இதுபோன்ற நச்சுக் கருத்துகள் இந்த இனத்தின் எதிர்கால அரசியலில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். இந்த இக்கட்டான - ஆபத்தான அரசியல் செல்நெறியைத் திசைமாற்றிவிட வேண்டிய பொறுப்பு இங்குள்ள அனைத்துத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் உண்டு.

ஒரு காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் தமிழ் மக்களின் அரசியல் இருப்புக்கும் ஆபத்தான முடிவுகளை எடுத்துச் செயற்பட்டபோது, அதனை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு நிலைமறந்தாடுபவர்கள் உருவாகியிருந்தனர். இப்போது அதே நிலைமறந்தவர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகியிருக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் ஆதரவாளர்கள், தமிழ் ஜே.வி.பியினரின் ஆதரவாளர்களென இந்த நிலைமறந்தவர்களின் வீச்சும் மூச்சும் அதிகரித்திருக்கின்றது. இவர்களில் அநேகம்பேர் கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய அரசியலில் பற்றுக்கொண்டவர்கள்தான். எனவே, இந்தத் தரப்பாரது எண்ணிக்கை அதிகரிக்க, தமிழ்த் தேசியப் பற்றாளர்களின் - பங்காளர்களின் எண்ணிக்கை சுருங்கிவருகின்றது. எவ்வித பொறுப்புமற்ற இந்தத் தரப்பினரது எழுச்சியானது ஈழத் தமிழர்களது அரசியல் அடையாளத்தை முழுவதுமாக சிதைத்துவிடும்.

ஆகவே, தமிழ்த் தேசிய அரசியல் கட்சியினரே..!

இந்த ஆபத்துகளைப் புரிந்துகொள்ளுங்கள். எதையாவது ஒரு துருப்புச்சீட்டைப் பிடித்துக்கொண்டு ஒரு வழித்தடத்துக்கு விரைவாக வாருங்கள்.இந்த இனம் இன்னும் பல காதை தூரம் நடக்கவேண்டியிருக்கிறது.

**ஜெரா**

# பேருவளை ஜாமிஆ நளீமியா இஸ்லாமிய கலாபீடத்தில் Maradana Charity உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம்







Maradana Charity அமைப்பு, பேருவளை பிரதேசத்தில் ஐந்து வருடங்களுக்கும் மேலாக சமூக அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வரும் சமூக அமைப்பாகும். பேருவளை ஜாமிஆ நளீமியா இஸ்லாமிய கலாபீடத்தில் Maradana Charity அமைப்பு அண்மையில் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. Maradana Charity அமைப்பின் தலைவர் அப்துல் காதர் பாச்சா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜாமிஆ நளீமிஆ இஸ்லாமிய கலாபீடத்தின் முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் பிரதம அதிதியாகவும் தொழிலதிபர் அஹ்ஸன் றிபாய் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்ததோடு Maradana Charity அமைப்பின் இலச்சினையையும் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர். மேலும், இந்நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக மற்றும் மதத்தலைவர்கள், அறிஞர்கள், நன்கொடையாளர்கள், நலன் விரும்பிகள், தொழில் வல்லுநர்கள், மஸ்ஜித் தர்மகர்த்தாக்கள், பாடசாலை அதிபர்கள், சமூக சேவை அமைப்புகள் மற்றும் தன்னார்வலர்கள் என பேருவளை சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல தரப்பினரும் கலந்து சிறப்பித்தனர்.

'ஐக்கியத்துடன் கூடிய சமூக அபிவிருத்தியை நோக்கி' எனும் தொனிப்பொருளில் Maradana Charity அமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, பேருவளை பிரதேசத்தில் அறிவுமயப்படுத்தப்பட்ட சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு பிரதேச பாடசாலைகளில் பல கல்வி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை, மாணவர்களுக்கான கருத்தரங்குகள், பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் தொழிற்கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான உளவள ஆலோசனைக் கருத்தரங்குகள், தொண்டர் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குதல், விசேட மேலதிக நேர வகுப்புகள் போன்ற பல்வேறு கல்விசார் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் இவற்றை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பிரதேசத்திலுள்ள பாடசாலைகளை ஒரு வலையமைப்புக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இந்நிகழ்வில் Maradana Charity அமைப்பின் பொதுச் செயலாளர் ரூமி ஹாரிஸ் தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் அதிதிகளாகக் கலந்துகொண்ட ஜாமிஆ நளீமியா இஸ்லாமிய கலாபீடத்தின் முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத், தொழிலதிபர் அஹ்ஸன் றிபாய் ஆகியோர் Maradana Charity அமைப்பின் செயற்பாடுகளைப் பாராட்டியதோடு தம்மாலான ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது பிரதேச பாடசாலை அதிபர்களான எஸ். குமார், அப்துல் ரஹ்மான் மற்றும் திருமதி யஹ்யா பாரூக் ஆகியோர் தங்களது பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்களையும் முன் வைத்ததோடு அதற்கான தீர்வுகளை Maradana Charity அமைப்பிடம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தனர்.

கொரோனா மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது பேருவளை பிரதேசத்தில் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களை Maradana Charity அமைப்பு முன்னெடுத்ததோடு கொரோனா காலத்தில் களுத்துறை, நாகொடை வைத்தியசாலையில் விசேட கொரோனாப் பிரிவொன்றை புனர்நிர்மாணம் செய்து கொடுத்ததோடு ஒக்சிஜன் தட்டுப்பாடு ஏற்பட்ட போது பிரதேசத்தில் இலவச ஒக்சிஜன் விநியோகத்தையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நக்கல் நமசிவாயம்



# மகனைக் காண 3,000 நாட்கள் போராடிய தாயின் பாசப்போராட்டம் முற்றுப்பெற்றது!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட தாய் உயிரிழப்பு






(சிவகுமார் திவியா)

வவுனியாவில் தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் சுழற்சிமுறைப் போராட்டத்தில் 3,000ஆவது நாளான நேற்று (24) தனது மகனைத் தேடிச் சென்ற தாயொருவர் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

வவுனியா, தோனிக்கல்லைச் சேர்ந்த வேலுச்சாமி மாரி என்பவரே தனது 79ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.

இவரின் மகனான வேலுச்சாமி சிவகுமார் 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்திலே காணாமல் ஆக்கப்பட்டார்.

இந்நிலையில், இவர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களில் முன்னின்று போராடியிருந்தார்.

இதேவேளை, தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சுழற்சிமுறை போராட்டத்தில் தொடர்ச்சியாக இணைந்து போராடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது மரணத்துக்கு முன்பதாக தனது மகனை நேரில் பார்த்து விடுவேன் என ஏங்கிய ஒரு தாயின் ஏக்கம் நிறைவேறாமல் முற்றுப்பெற்றுள்ளது.

## தீப்பற்றியெரிந்த பஸ்ஸிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுரம் ஜேத்தவனாராம பகுதியில் தீப்பற்றியெரிந்த பஸ்ஸினுள் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எம்பிலிபிட்டி பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு யாத்திரிகர்களை அழைத்துச் சென்ற பஸ் ஒன்றே அநுராதபுரம் ஜேத்தவனாராம விகாரைக்கருகிலுள்ள விடுதியொன்றுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது தீப்பற்றி எரிந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 55 வயதுடைய எம்பிலிபிட்டிய பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவரென்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், அரச பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகளை சம்பவ இடத்துக்கு வரவழைத்து பகுப்பாய்வு விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அண்மைய கொலைச் சம்பவங்களால் சட்டத்தின் ஆட்சிக்கு பெரும் அச்சுறுத்தல்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்த சந்தேக நபர்கள் அண்மைய நாட்களில் கொல்லப்பட்ட சம்பவங்களால் சட்டத்தின் ஆட்சிக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (Bar Association of Sri Lanka) தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் புதுக்கடை நீதவான் நீதிமன்றத்துக்குள் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலிலிருந்தபோது கணேமுல்ல சஞ்சீவ என்ற சந்தேக நபர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதேவேளை, கொட்டாஞ்சேனை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் கடந்த 21ஆம் திகதி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இவ்வாறான சம்பவங்களால் சட்ட அமைப்புகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை சிதைவடையுமென்பதால் அவற்றைத் தடுப்பதற்கு பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டுமென சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

# ஆரையம்பதி விளையாட்டு மைதானத்தில் இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய நால்வருக்கு விளக்கமறியல்

## தப்பிச்சென்றோரை கைதுசெய்யவும் உத்தரவு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, ஆரையம்பதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது 5 பேர் கொண்ட குழுவினர் வாளால் வெட்டி தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட 4 பேரையும் எதிர்வரும் மார்ச் 04ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய இரு சந்தேகநபர்களையும் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று (24) உத்தரவிட்டார்.

ஆரையம்பதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு மின்னொளியில் இளைஞர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். இதன்போது அங்கு வாள்களுடன் நுழைந்த 5 பேர் கொண்ட குழு விளையாடிக்கொண்டிருந்த சிலரைத் துரத்தித்துரத்தி வாளால் வெட்டி தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில், மட்டு. போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் தப்பியோடி தலைமறைவாகியிருந்த நிலையில், நேற்று முன்தினம் (23) இரவு 4 பேரை கைதுசெய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நேற்று (24) ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் மார்ச் 04ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் தப்பிச்சென்ற ஏனையோரைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# சிவனொளிபாதமலைக்குச் செல்லும் யாத்திரிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை

## முறையிட விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

சிவனொளிபாதமலைக்குச் செல்லும் யாத்திரிகர்கள் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, இரத்தினபுரி ஊடாக சிவனொளி பாதமலைக்குச் செல்லும் யாத்திரிகர்கள் 045 347 1122 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும் நல்லதண்ணியூடாக சிவனொளிபாதமலைக்குச் செல்லும் யாத்திரிகர்கள் 052 205 5522 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும் தொடர்புகொண்டு தங்களது பிரச்சினைகளை முறையிட முடியும்.

இந்தத் தொலைபேசி இலக்கங்களானது 24 மணிநேரமும் சேவையிலிருக்குமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நிதி அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட 176 வாகனங்கள் குறித்து தகவலில்லை

## கணக்காய்வு அலுவலக அறிக்கையில் தெரிவிப்பு

நிதி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 257 வாகனங்களில் 176 வாகனங்கள் குறித்து தகவல் இல்லையென தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில், 99 வாகனங்கள் குறித்து எந்தவொரு தகவலும் கணக்காய்வு அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

நிதி அமைச்சின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து வாகனங்களின் இருப்பு மற்றும் உரிமையை சரிபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கணக்காய்வு அலுவலகம் பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, இந்த 176 வாகனங்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நிதியமைச்சின் தலைமைக் கணக்கியல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவல் 2023ஆம் ஆண்டுக்கான நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சால் வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிளுடன் கார் மோதி விபத்து

## வாகனங்கள் இரண்டும் முற்றாக தீக்கிரை



(சி.திவியா)



வவுனியாவில் மோட்டார் சைக்கிளுடன் கார் மோதி விபத்துக்குள்ளானதில் காரும் மோட்டார் சைக்கிளும் முற்றாகத் தீப்பற்றி எரிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை (24) வவுனியா - பூந்தோட்டம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகர் பகுதியிலிருந்து பூந்தோட்டம் நோக்கிச் சென்ற காரும் பூந்தோட்டம் பகுதியிலிருந்து வவுனியா நகர் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியே விபத்து சம்பவித்துள்ளது.

இதையடுத்து இரு வாகனங்களும் தீப்பற்றி எரிந்த நிலையில், அங்கு குழுமிய மக்களால் தீயை கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அது சாத்தியப்படவில்லை.

இந்நிலையில், மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு, காரில் சென்றவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

வவுனியா நகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் விரைந்து சென்று தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்த போதிலும் காரும் மோட்டார் சைக்கிளும் முற்றாக எரிந்துள்ளன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 6 கோடி ரூபா பெறுமதியான கஞ்சாவுடன் இருவர் கைது



(பு.கஜிந்தன், மு. தமிழ்ச்செல்வன்)

வாகனமொன்றில், அண்ணளவாக 400 கிலோ எடையுடைய கஞ்சாவைக் கடத்திச்சென்ற இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வாகனமொன்றில் சூட்சுமமாக கஞ்சா கடத்துவதாக கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து வீதிச் சோதனையில் ஈடுபட்டனர். உமையாள்புரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வீதிச் சோதனையில் குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டதுடன், வாகனமும் அதன் சாரதி உள்ளிட்ட இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது அண்ணளவாக 400 கிலோ எடை கொண்ட கஞ்சா மீட்கப்பட்டதுடன், அதன் பெறுமதி 6 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





கொழும்பிலுள்ள முக்கிய ஸ்தலங்களைப் பார்வையிடுவதற்காக வசதி குறைந்த குடும்பத்திலுள்ள பாடசாலை செல்லும் மாணவர்களை கொழும்பு டாம் வீதி முன்னாள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆராச்சி அழைத்துச் சென்றுள்ளார். இதில் தற்போதைய டாம் வீதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.டி.புஞ்சிஹேவாகே, பொலிஸ் குழு உறுப்பினர்களான ஜாபிர், ஷபீக், ஜிப்ரி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# நகைச்சுவை நண்பனுக்கு என்னாச்சு?



ஒழுக்கம் எனும் அஸ்திவாரத்தின் மீது தான், இன்பம் எனும் மாளிகை அமைக்கப்பட வேண்டும்
-செஸ்டர் பீல்ட்-

எந்தத் தீய பழக்கத்தையும் மிக எளிதாகக் கற்றுக் கொள்ளலாம். ஆனால், அதை அவ்வளவு எளிதாக விட முடியாது. ஏனெனில், அது நம் மனதை வெகு சுலபமாக அடிமைப்படுத்திவிடும்.

தீய பழக்கங்கள் நம் உடலுக்குக் கேடு விளைவிக்கும் என்பது நமக்குத் தெரியாதா என்ன! எனினும், அவற்றைப் பழகிப் பார்க்க மனம் ஆசைப்படுகின்றது.

காரணம், அவற்றின் கவர்ச்சி. மறைக்கப்படுவது எதுவோ, தடுக்கப்படுவது எதுவோ, அதன் மீதுதான் ஆசை அதிகமாகிறது. ஏன், எதற்கு என்ற கேள்விகளுக்கே அங்கு இடமில்லை. எதையும் அனுபவித்தறிவதில் ஏற்படுகின்ற ஆர்வம் அலாதியானது.

தெரியாததைத் தெரிந்து கொள்ளும்போது தான் அறிவு விருத்தியாகும். சைக்கிள் ஓட்டிப் பழகும்போது, அதுதான் மிகப்பெரிய ஞானக்கலையாகத் தெரிகிறது. பார்க்கின்ற சைக்கிளை எல்லாம் ஓட்டிப் பார்க்க ஆசை எழுகிறது.

பாடங்களை அன்றன்று படித்து முடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டவன், ஒருபோதும் அதை விடுவதில்லை. அந்தப் பழக்கம் தேர்வுகளை அவனுக்குச் சுலபமாக்குவது மட்டுமன்றி, அவனுக்குள் ஓர் ஒழுங்குமுறையையும் உருவாக்கிவிடுகிறது. அது அவனை உயர்த்துகிறது.

குறித்த நேரத்தில் அலுவலகத்தில் இருப்பது ஒருவகை ஒழுக்கம். இலஞ்சம் வாங்காமல் தன் கடமைகளைச் செய்வது மிகச்சிறந்த ஒழுக்கம். கடன் வாங்காமல் திட்டமிட்டுக் குடும்பத்தை நடத்துவதும் ஒழுக்கம்தான். இவை அனைத்தும் பழக்கத்தில் வருபவை. நல்லவற்றைச் செய்வதற்கு ஒருவன் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டால் போதும். நல்லவனாய் இருப்பதைப் பற்றி அவன் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை.

சிலர் இருக்கிறார்கள், தினந்தோறும் அலுவலகத்துக்கு அரைமணி நேரம் பிந்தித்தான் செல்வார்கள். அங்கே போய் மேலாளரிடம் தலையைச் சொரிந்து கொண்டு நிற்பார்கள். சிலருக்கு, இலஞ்சம் வாங்காமல் எந்த வேலையும் செய்ய முடியாது. இப்படி ஒழுக்கக்கேடான பழக்க வழக்கங்கள் நிறைய உண்டு. ஒன்றைப் பழகிக் கொண்டபின், அது வழக்கமாகிவிடுகிறது.

நல்லவை, தீயவை - இவையே மனித வாழ்வின் இருவேறு நிலைகளைத் தீர்மானிக்கின்றன. நல்ல பழக்க வழக்கங்கள் நமக்கு நற்பெயரைத் தருகின்றன; ஆரோக்கியத்தையும் தருகின்றன. நல்லவற்றின் மூலம்தான் வாழ்க்கை உயர்வு பெறுகின்றது.

தவறான தொடர்புகளும் தாறுமாறான செயற்பாடுகளும் ஒரு மனிதனின் வாழ்வைத் தலைகீழாய்ப் புரட்டிப் போட்டுவிடும்.

அதனால்தான், ஆரோக்கியத்திலும் வாழ்வின் நகர்விலும் பின்தங்கிக் கொண்டிருப்பவனைப் பார்ப்பவர்கள், அவனுடைய பழக்க வழக்கம் சரியில்ல என்கிறார்கள். அது உண்மையும்கூட!

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, ஓர் இலக்கிய நண்பன் எனக்குக் கிடைத்தான். நாங்கள் இருவரும் வெவ்வேறு பாடப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். எனினும், இலக்கிய ஆர்வம் எங்களை இணைத்தது.

அந்த நண்பனின் வீட்டு மொட்டை மாடியில், கலைக்குடில் என்று ஓர் அமைப்பை ஏற்படுத்தியிருந்தோம். தென்னங்கீற்றுகளால் கூரை வேய்ந்த குளிர்ச்சியான ஓர் அறை. பெரும்பாலான மாலைப் பொழுதுகள் அங்குதான் செலவிடுவோம். என் இலக்கிய நண்பனுக்கு நன்கு பழக்கமான மற்றொரு நண்பனும் அங்கு அவ்வப்போது வருவான். அவன் வேறொரு கல்லூரியில் பி.காம் படித்துக் கொண்டிருந்தான்.

அவன் நகைச்சுவை உணர்வு மிக்கவன். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். அவனை நகைச்சுவை நண்பா என்றுதான் நான் அழைப்பேன். வரும்போது கடுகடுப்பாக உம் என்று வருவான். வந்து உட்கார்ந்து, ஒரு சிகரெட்டை முழுவதுமாக இழுத்து முடித்ததும், கலகல என்று பேசத் தொடங்குவான். நகைச்சுவை ததும்பத் ததும்பப் பேசுவான். வெடிச்சிரிப்பாய்ச் சிரிப்பான். சில நிமிடங்களில் பட்டென்று அமைதியாகிவிடுவான். பின்னர் கிளம்பிவிடுவான்.

அவனுடைய நடவடிக்கைகள் வேடிக்கையாகவும் சில சமயங்களில் விநோதமாகவும் இருக்கும். அவனைப் பற்றி என் இலக்கிய நண்பனிடம் விசாரித்தேன்.

அவன் புகைப்பது சாதாரண சிகரெட் இல்ல. அதில் வேறொரு விஷயம் இருக்கு. அதைப்பற்றி அவனிடமே கேள் என்றான்.

அதன்பின் நான்கைந்து நாட்கள் நான் அங்கு செல்லவில்லை. பின்னொரு மாலைப் பொழுதில் கலைக்குடிலுக்குச் சென்றேன். அமெரிக்கக் கவிஞன் வோல்ட் விட்மனின் புல்லின் இலைகள் (லீவ்ஸ் ஒவ் கிராஸ்) என்ற நூல் பற்றி சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது, அந்த நகைச்சுவை நண்பன் விறுவிறு என்று வந்தான்.

மோடாவில் உட்கார்ந்ததும் தனது சட்டைப் பையிலிருந்து ஒரு சின்னஞ்சிறு பொட்டலத்தை எடுத்து, அதிலிருந்த ஏதோ ஒன்றைத் தனது இடது உள்ளங்கையில் கொட்டி, வலது கையினால் நன்றாகக் கசக்கினான். பின்னர், அதில் விலக்க வேண்டியவற்றைப் பொறுக்கினான். அதன்பின், சிகரெட்டிலுள்ள புகையிலையை வெளியே தள்ளிவிட்டு, உள்ளங்கையிலிருந்த துகள்களை வெகு இலாவகமாக சிகரெட்டுக்குள் ஏற்றினான். ரசித்துப் புகைக்கத் தொடங்கினான். அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அரட்டை அமர்க்களம் ஆரம்பமானது.

எனக்குப் புரிந்துவிட்டது. எனினும், அவனிடம் கேட்டேன். இது என்னது? கஞ்சா என்றான்.

இந்தப் பழக்கம் உனக்கு எப்படி...?

ஆராய்ச்சி எதுக்கு... எப்படியோ பழகிட்டேன். இந்த சுகமே தனி. இது ஒரு தேவமூலிகை என்றான்.

இது ரொம்ப ஆபத்தானதுன்னு சொல்றாங்களே.

அளவுக்கு அதிகமானா எதுவும் ஆபத்துதான். கோப்பி, டீ, சர்க்கரை, சோறு எல்லாமே கேடுதான். ஆனா ஒரு புதுமையான சுகத்தை இதுமூலம் நான் அனுபவிக்கிறேன் என்று சொல்லி, புகையை ரசித்து உள்ளிழுத்தான். முழுவதுமாக இழுத்து தீர்த்தபின், சற்று நேரத்தில் எழுந்து சென்றுவிட்டான். நாட்கள் நகர்ந்தன.

கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர், ஊரிலிருந்து நான் சென்னை வந்துவிட்டேன். மாதங்கள் வருடங்கள் எனக் காலம் ஓடியது. திருமணமாகி சென்னையில் செட்டில் ஆனபின், வருடத்துக்கு மூன்று அல்லது நான்கு முறை குடும்பத்துடன் ஊருக்குச் சென்று வருவேன். ஆனால், பழைய நண்பர்களைச் சந்திக்கச் செல்வது அரிதாகிப் போனது.

அப்படி ஒருமுறை ஊருக்குச் சென்றிருந்தபோது, என் இலக்கிய நண்பனைக் காணச் சென்றேன். வருடங்கள் கழித்துப் பார்த்த நெகிழ்ச்சியில், என்னை ஆரத்தழுவிக் கொண்டான். கடந்த காலத்தின் நினைவுகளைப் பேசிப் பேசிக் களித்தோம். நகைச்சுவை நண்பனைப் பற்றிய நினைவு வர, ஆவலுடன் விசாரித்தேன். இலக்கிய நண்பனின் முகத்தில் வருத்தம் படர்ந்தது.

உடம்புக்கு முடியல. படுத்த படுக்கையா இருக்கிறான் என்றான். என் மனம் கவலையில் ஆழ்ந்தது.என்னாச்சு என்றேன் பதற்றத்துடன்.

முழுக்க முழுக்க கஞ்சா, பெத்தடின் ஊசி மருந்து, போதை மாத்திரைக்கு அடிமை ஆயிட்டான். யார் சொல்லியும் கேட்கல. இப்ப பல ஹெல்த் இஷ்யூஸ். எப்ப என்ன ஆகும்னு சொல்ல முடியாது என்றான்.

பார்க்க வேண்டும் என்றேன். அழைத்துச் சென்றான்.

அந்த வீட்டின் ஒரு சிறிய அறையில், ஒடுக்கமான கட்டிலில் முடங்கிக் கிடந்தான் அவன். தேகம் துரும்புபோல் இளைத்திருந்தது. முகம் மொத் மொத்தென்று விகாரமாக இருந்தது. வீங்கியிருந்த கால்களின் வெடிப்புகளிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது.

பக்கத்தில் போய் அமர்ந்தேன். அவனால் பேச முடியவில்லை. கைகளைத் தொட்டேன். அவை ஜீவனற்றுக் கிடந்தன. எனக்கு மனது தாங்கவில்லை. கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது. அந்த அறையை விட்டெழுந்து ஹோலுக்கு வந்தேன். அவனுடைய அப்பா, கண்களை மூடிக்கொண்டு ஈஸி சேரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். நான் அருகில் செல்ல, கண்களை மெல்லத் திறந்தார்.

ஹொஸ்பிடலில் அட்மிட் பண்ணலாமே என்றேன்.

வேஸ்ட். எந்தப் பிரயோஜனமும் இல்ல. பெத்து வளர்த்தவங்களுக்குக் கண்ணீர்தான் மிச்சம். அவன் போகப் போறான் என்று சொல்லிவிட்டு, விரக்தியுடன் மீண்டும் கண்களை மூடிக் கொண்டார்.

நானும் என் இலக்கிய நண்பனும் கனத்த இதயத்தோடு வெளியே வந்தோம். அந்த நண்பனின் சிரிப்பு, பேச்சு, மேனரிசம் எல்லாம் அலையலையாய் என் நெஞ்சில் மோதி அடித்தன.

கஞ்சா, அபின், ஹெரோயின், கொக்கெய்ன் போன்ற கொடிய போதைப்பொருட்கள் இன்று பரவலாகப் புழக்கத்தில் உள்ளன என்னும் செய்தி, பேரதிர்ச்சியையும் பெருங்கவலையையும் நமக்கு ஏற்படுத்துகின்றன. மனித சமூகத்தின் வேர் அறுபடாமல் பாதுகாக்கப்படுவதற்கு, இன்றைய இளைஞர்கள் மட்டுமன்றி எல்லோருமே பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

போதைப்பொருட்கள் மாயாஜால வித்தைகளை மனதுக்குள் நிகழ்த்துகின்றன. நிஜத்தில் சாத்தியமில்லாத மாய உலகில் மிதக்கச் செய்கின்றன.

விபரீத சிந்தனைகளைத் தூண்டுகின்றன. தன்னைத் தானே மறக்கின்ற அளவுக்கு ஒருவித பரவச நிலையில் மனதை ஆழ்த்துகின்றன. முடிவில், அதல பாதாளத்தில் தள்ளிவிடுகின்றன.

போதைப்பொருட்களுக்கு எதிரான எத்தனையோ சட்டதிட்டங்கள் நாட்டில் உள்ளன. ஆனால், சட்டதிட்டங்களால் மட்டுமே சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது. ஒவ்வொரு குடும்பமும் பொறுப்புணர்வுடன் செயற்பட்டால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

பெற்றோர் தங்கள் குழந்தைகளின் மனதில் நல்ல நல்ல விஷயங்களை ஒவ்வொரு நாளும் விதைத்துக்கொண்டே இருக்க வேண்டும். போதைப்பொருட்களின் அபாயத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஆரம்பத்திலேயே ஏற்படுத்திவிட வேண்டும். ஆணோ பெண்ணோ, இருபாலருக்கும் ஒழுக்கம் அவசியம். எனவே, அவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய கடமை எமக்கு இருக்கிறது.

பிள்ளைகளிடம் அன்பு காட்டுவது எவ்வளவு முக்கியமோ அதேபோல், அவர்களைக் கனிவுடன் கண்காணிப்பதும் மிக முக்கியம். குறிப்பாக, தீய நட்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சீரான வளர்ப்புதான் சிறந்த வாழ்க்கையை உருவாக்கும்.

எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மிகக் கவனமாகக் கையாள வேண்டும். ஆரோக்கியமான வாழ்வின் அழகையும் அது தருகின்ற உன்னதமான இன்பங்களையும் பிள்ளைகளின் மனதில் பதியச் செய்ய வேண்டும். வாழ்க்கை ஓர் நெடிய பயணம். இந்தப் பயணம் இனிதாகவும் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டுமெனில், பாதை செம்மையானதாக இருக்க வேண்டும்.

**கவிஞர் தியாரூ**

**நன்றி - மாலை மலர்**

# நம்மிடமே இருக்கு மருந்து சுரைக்காய்!





வெள்ளரிக் குடும்பத்தைச் சேர்ந்த, நீர் காய், சுரைக்காய். இனிப்பு, கசப்பு என, இரு சுவைகளில் இருந்தாலும் இனிப்பு சுவை கொண்டதையே நாம் அதிகமாக பயன்படுத்துகிறோம்.

★ ஆண்மைக் குறைபாட்டை நீக்க சிறந்தது. உடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது. சிறுநீர் பெருக்கத்தை தூண்டும். மலமிளக்கியாகவும் செயற்படுகிறது. உடலின் வெப்ப நிலை, பித்தத்தை சமநிலைப்படுத்தும். இதை, பித்த சமனி என்பர்.

★ கை, கால்களில் குறிப்பாக பாதங்களில் எரிச்சல் நீங்க, சுரைக்காயின் சதைப்பகுதியை துணியில் வைத்து கட்டினால் குணமாகும்.

★ தினமும் சுரைக்காய் சாறு அருந்தி வந்தால், சிறுநீர் பாதையில் ஏற்படக் கூடிய எரிச்சல் குணமாகும்.

★ குழந்தை பிரசவித்த பெண்கள், தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கவும் உடல் எடை குறைக்க நினைப்பவர்களும் சுரைக்காயுடன் பாசிப்பயிறு சேர்த்து கூட்டு வைத்து சாப்பிடலாம்.

★ சுரைக்காயை அரைத்து உடலில் பூசி வந்தால், உடலின் வெப்பநிலை குறைவதோடு, குளிர்ச்சியும் ஏற்படும்.

★ சுரைக்காயின் சதைப்பகுதியை அரைத்து, நெற்றியில் தடவி வர, கண் எரிச்சல் குணமாகும். வெயிலில் அதிகமாக அலைவதால் ஏற்படும் தலைவலி, ஒற்றை தலைவலி ஆகியவற்றுக்கு, சுரைக்காயின் சதைப்பகுதியை துணியில் வைத்து, நெற்றியில் கட்டினால் தலைவலி நீங்கும்.

★ சுரைக்காயுடன் மல்லி, மிளகுத்தூள் மற்றும் உப்பு கலந்து, சாலட் செய்து சாப்பிடலாம்.

★ சுரைக்காய் குடுவையில், தண்ணீரை சேமித்து வைத்துக் குடித்தால், தாகம் குறையும். அந்த தண்ணீரில் விற்றமின் சத்துகளும் நிறைந்திருக்கும். இந்த நீரில், தேனை ஒரு பாத்திரத்தில் வைத்து பாதுகாத்து, சாப்பிட்டு வரலாம்.

★ சுரைக்காய் இலையுடன் வெங்காயம், பூண்டு சேர்த்து கூட்டு வைத்து சாப்பிட்டு வந்தால், நீர் நோய்கள் நீங்கும்

★ உடலில் ஏற்படும் வீக்கம், நீரேற்ற நோய்களையும் குறைக்கும்.

★ சுரைக்காய் இலையுடன் தண்ணீர் சேர்த்து, கசாயம் தயாரித்து, தேவையான அளவு சர்க்கரை கலந்து சாப்பிட்டால், மஞ்சள் காமாலை சரியாகும்.

**- அமுதா அசோக்ராஜா-**

## தொடர்ச்சியாக ஐந்தாவது வருடமாகவும் இலங்கையின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாகத் திகழும் AIA இன்ஷூரன்ஸ்



சர்வதேச அளவில் புகழ்பெற்ற கெப்பிட்டல் பைனான்ஸ் இன்டர் நெஷனல் (CFI) மற்றும் குளோபல் பேங்கிங் என்ட் பைனான்ஸ் ரிவியு (GBFR) நிறுவனங்களால் இலங்கையின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாகத் தொடர்ச்சியாக ஐந்தாவது வருடமாகவும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளதை AIA இன்ஷூரன்ஸ் விமர்சையாகக் கொண்டாடி வருகின்றது. இந்த உயர் சாதனையானது முன்னொரு போதுமில்லாத சவால்களை நிறுவனம் எதிர்கொண்டிருந்தாலும் புதுமை, வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சேவை மற்றும் சமூக அங்கீகாரம் ஆகியவற்றில் AIA இன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைப் பறைசாற்றி அதற்கான சான்றாகவும் அமைகின்றது.

2023 மற்றும் 2024 காலப்பகுதி AIA இன்ஷூரன்ஸ் நிறுவனத்துக்கு சவால்களிலிருந்து மீண்டு வருவதற்கான ஒரு வருடமாகவே அமைந்திருந்தது. எவ்வாறாயினும், ஏற்றத்தாழ்வான பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில் இலங்கை மக்களுக்கு உறுதியான காப்புறுதிப் பங்காளராக இருக்க வேண்டுமென்ற நிறுவனத்தின் நோக்கம் ஒருபோதும் தடுமாற்றமின்றியே அமைந்திருந்தது. தனது வாடிக்கையாளர்கள் மற்றும் பரந்த சமூகத்தின் நல்வாழ்வுக்கு முன்னுரிமையளித்து AIA தொடர்ந்தும் தனது நேர்மறையான நோக்கத்துடன் பயணிப்பதுடன் இலங்கையர்களின் அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக தனது சலுகைகளையும் மேம்படுத்தியுள்ளது.

டிஜிட்டல் புதுமைகளினால் ஆதரிக்கப்படும் வாடிக்கையாளர் மகிழ்ச்சிக்கான AIA இன் அர்ப்பணிப்பு அதன் வெற்றியின் அடிக்கல்லாகவே திகழ்ந்து வருகின்றது. கடந்த ஒரு வருடத்தில் காப்புறுதித் துறையில் புதிய தரநிலைகளை அமைக்கும் முன்னோடித் தீர்வுகளை அறிமுகப்படுத்தி நிறுவனம் தனது டிஜிட்டல் மாற்றப் பயணத்தைத் துரிதப்படுத்தியே உள்ளது. அதி நவீன மனித மையப்படுத்தப்பட்ட பொயின்ட் ஒவ் சேல் (POS) அமைப்புகள் முதல் மேம்பட்ட ரோபோடிக் செயல்முறை ஓட்டோமேஷன் மற்றும் கிளவுட் அடிப்படையிலான மூலோபாயம் வரை AIA தொடர்ச்சியாக தனது வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற மற்றும் வினைத்திறனான அனுபவங்களையே வழங்கி வருகின்றது.

## Prime Lands Residencies PLC இன் 'The Colombo Border' திட்டத்துக்கு முதலீட்டுச் சபையின் 65 மில். அமெரிக்க டொலர் விஸ்தரிப்பு அனுமதி



ரியல் எஸ்டேட் துறையில் புத்தாக்கத்துக்கு புகழ்பெற்ற நாமமான Prime Lands Residencies PLC, இலங்கையின் நகர வசிப்பகத் துறையில் 'The Colombo Border' திட்டம் ஒரு முக்கிய முன்னேற்றமாக உருவாகிறது.

The Grand Ward Place திட்டம் வெற்றிகரமாக அமைந்திருந்ததைத் தொடர்ந்து, Colombo Border திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்காக முதலீட்டு சபையிடமிருந்து 65 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ளது. Prime Lands இன் ஏற்கனவே காணப்படும் முதலீட்டுச் சபைச் செயற்றிட்டப் பிரிவில் குறிப்பிடத்தக்களவு விரிவாக்கமாக இந்த முதலீடு அமைந்திருக்கும்.

முதலீட்டுத் திட்டத்தின் தகுதியாக தரம் மற்றும் பொறுப்புணர்வை அதிகரிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. தோற்றப்பாட்டுக்கு முன்னுரிமையளித்து, அதன் உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் செயற்றிட்டத்தின் விருத்தியை, கட்டுமானத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.

நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் நகரமயமாக்கலில் புதிய நியமங்களை ஏற்படுத்தும் வகையில் The Colombo Border திட்டம் அமைந்திருக்கும். இலங்கையில் நகர வாழிடம் தொடர்பான உறுதியான அறிக்கையை வெளியிட்டுள்ளதுடன், வாழ்க்கைமுறை அனுபவங்கள் மற்றும் வதிவிட விருத்தி போன்றவற்றில் நாட்டின் எதிர்காலத்தை அடையாளப்படுத்துவதாகவும் இது அமைந்துள்ளது.

## Alumex PLC இன் Lumin Certification Awards - 2025



இலங்கையில் உயர்தர அலுமினியப் பொருட்களின் முதன்மையான உற்பத்தியாளரான Alumex PLC நிறுவனம், அண்மையில் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் மதிப்புமிக்க Lumin Certification Awards - 2025 விருது விழாவை முன்னெடுத்திருந்தது. இந்த மைல்கல் நிகழ்வானது, Lumin சான்றளிக்கப்பட்ட மதிப்புமிக்க அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட 37 அலுமினியப் பொருட்கள் உற்பத்தியாளர்களின் சாதனைகளைக் கொண்டாடியதோடு, Lumin நிபுணர்களின் வலையமைப்பை 114 ஆக விரிவுபடுத்தியது.

திறமை கொண்டவர்களை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் முறையான அங்கீகாரம் மூலம் தொழில் தரங்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இந்த விழா எடுத்துக்காட்டியது.

## Samsung Galaxy S25 Series இலங்கையில் அறிமுகம்



அதிகம் எதிர்பார்க்கப்பட்ட புதிய Galaxy S25 Series ஐ Samsung Sri Lanka உத்தியோகபூர்வமாக இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதில் Galaxy S25 Ultra, Galaxy S25+மற்றும் Galaxy S25 ஆகிய மூன்று மாதிரிகள் அடங்கும். இந்த Series புதிய AI தொழில்நுட்பத்துடன் புரட்சிகரமான பல்வகை AI முகவர்களைக் கொண்டுள்ளது. இதன் மூலம் பாவனையாளர்கள் தங்கள் சாதனங்களுடனும் அவர்களைச் சுற்றியுள்ள உலகத்துடனும் எவ்வாறு தொடர்புகொள்கிறார்கள் என்பதை மறுவரையறை செய்கிறது.

அதேபோல, Galaxyக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட Snapdragon 8 Elite Mobile Platform தொழில்நுட்பத்துடன், தனித்துவமான AI செயற்றிறன், மிகச்சிறந்த கேமரா தொழில்நுட்பம் மற்றும் வசதியான பாவனையாளர் அனுபவத்தை வழங்குகிறது.

## NDB வங்கியின் 'மாணவர்களுக்கான திறன்' பயிற்சிப்பட்டறை





NDB வங்கியானது அண்மையில் 'மாணவர்களுக்கான திறன்' என்ற தலைப்பில் ஆற்றல்மிக்கதும் மற்றும் ஊக்கமளிப்பதுமான பயிற்சிப் பட்டறையை Convent of Our Lady of Victories இல் நடத்தியது. NDB கற்றல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் கற்றல் மற்றும் அபிவிருத்திக்கான பிரதம முகாமையாளரினால் வழிநடத்தப்பட்ட இந்தத் திட்டமானது அனைத்து பிரிவுகளிலுமுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தர [A/L] மாணவர்களை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்குத் தேவையான தனிப்பட்ட சீர்ப்படுத்தல் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான திறன்களை வழங்குவதன் மூலம் அவர்களின் உண்மையான ஆற்றலை வெளிப்படுத்தவும் கல்வி வெற்றிக்கான இலட்சிய இலக்குகளை அமைக்கவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

NDBயின் பல்வேறு முயற்சிகளில் ஒன்றான இந்தத் திட்டமானது பாடசாலைகளுக்கான நம்பகமான வளர்ச்சி பங்குதாரராகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும்வகையில் இளைஞர்களின் முன்னேற்றத்தில் வங்கியின் உண்மையான ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. மேலும் இந்தப் பயிற்சிப்பட்டறையானது பங்கேற்பாளர்களிடையே முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்த தலைப்புகளின் வரிசையை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த அமர்வுகள் திறமை, ஆர்வம் மற்றும் நோக்கம் ஆகியவற்றைக் கண்டறிதல், ஆளுமை விவரக்குறிப்பு, இலக்கு அமைத்தல் மற்றும் மாணவர்களின் அபிலாஷைகளை அடைவதற்கான வெற்றிக்கருவிகள் மற்றும் முறைகளுடன் அவர்களைச் சித்தப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.

இந்த ஊடாடும் மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய தொகுதிகள் மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கத் தேவையான வழிகாட்டுதலை வழங்கிய அதேவேளை, அவர்களின் பலத்தைப் பற்றிச் சிந்திக்கவும் ஊக்குவித்தது.





**Sysco LABS தேசத்தின் பொருளாதாரத்துக்கு ஆற்றும் பங்களிப்புக்காக அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் 2023/24 நிகழ்வில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பிரிவில் ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளர் விருதைச் சுவீகரித்தது.**













**ஹஸ்மா பிரைடலின் இரண்டாவது ஆண்டு விருது வழங்கும் விழா வெல்லம்பிட்டிய Dewdrop Banquet Hall மண்டபத்தில் நிறுவுனர் மற்றும் பணிப்பாளர் திருமதி எம்.என்.எப்.அஸ்மா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாகக் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர , ஹாஷிம் உமர் அறக்கட்டளையின் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர் ஆகியோரை திருமதி எம்.என்.எப் அஸ்மா வரவேற்றார். இதன்போது Make up, மருதாணி, அழகுசாதனப் பொருட்கள், கேக் தயாரித்தல் போன்ற கற்கைநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கு விருதுகள், பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவ்வைபவத்தில் ஏராளமான bridal அகாடமி நிர்வுனர்களின் இயக்குநர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலம் விரும்பிகள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பங்கேற்ற புரவலர் ஹாஷிம் உமருக்கு ஹஸ்மா பிரைடலின் நிறுவுனர் எம்.என்.எஃப். அஸ்மா நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.**

**படப்பிடிப்பு:** *எம்.நசார்*



## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் (daily) | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் (weekend) | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address :- The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

**Tel No: - 0112 127 209**

# மலையக கலைஞர்களின் கௌரவிப்பு விழாவை அரச விழாவாக நடத்த நடவடிக்கை

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவிப்பு

*பொகவந்தலாவை நிருபர்*

மலையக கலைஞர்களுக்கான கௌரவிப்பு விழாவை இந்து கலாசார புத்த சாசன அமைச்சின் ஊடாக கலந்துரையாடி அரச விழாவாக மலையகத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி பிரதி









அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

சிற்ப செதுக்கள் ஓவிய கலைஞர்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலைஞர்கள் கௌரவிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் உட்பட அமைச்சின் செயலாளர் வசந்த மூர்த்தி, அமைச்சின் ஊடகச் செயலாளர் அஜித்குமார், அதிபர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்,

மலையகத்துக்கு அரசியல் மாற்றமென்பது முக்கியமானது. அந்த மாற்றம் தற்போது நிறைவேறியிருக்கிறது. இரத்தினபுரி மாவட்டம் என்பது கடந்த காலங்களில் அரசியலில் அநாதையாக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்ட ஒரு மாவட்டம். மலையகத்துக்கென எனக்கு வழங்கப்பட்ட அமைச்சின் ஊடாக கடந்த காலங்களில் விட்ட தவறுகளை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

மலையக பெருந்தோட்ட மக்கள் 14 மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்த அனைத்து மாவட்டங்களிலும் வாழுகின்ற மக்களை நாம் சம ரீதியாக பார்க்க வேண்டியுள்ளதோடு, அம்மக்களுக்கான வாய்ப்பை வழங்க வேண்டும். தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் அம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்கவேண்டியது எமது முக்கிய கடப்பாடாகவுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் தெனியாய பிரதேச தமிழ் மக்கள் கலாசாரம், மொழி என்பவற்றை இழந்து வாழக்கூடிய ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் மொழியைக் கூட கற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலையில் அம்மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கல்வியின் ஊடாகத்தான் கலாசாரத்தை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியும். அப்பகுதி மக்களின் பிள்ளைகளுக்கு எதிர்வரும் காலங்களில் தமிழ் மொழி ஊடாக கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

200 வருட மலையகத்தின் வரலாற்றை கொண்ட தமிழ் மக்களாகிய நாம் ஏனைய சமூகங்களை ஒப்பிடுகின்றபோது பல வருடங்களாக பின்னோக்கியிருக்கின்றோம். இதனை நாம் எவ்வாறு சீர் செய்வது? கடந்த கால ஆட்சியாளர்களை குறைகூறிக்கொண்டிருக்க முடியாது. மலையகத்தில் உள்ள அனைத்து அரசியல் பிரதிநிதிகளுக்கும் நாம் அழைப்பு விடுகிறோம்.

எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

இந்த தேசிய மக்கள் சக்தியின் அரசு மக்களின் அரசு. இது உழைக்கும் மக்களின் அரசு. ஆகவே உழைக்கும் மக்களின் குறைகளை கண்டறிந்துள்ளது.

வெகுவிரைவில் மக்களின் பிரச்சினைகள் கட்டம்கட்டமாக தீர்க்கப்படும். மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்விக்கு நாங்கள் முன்னுரிமை வழங்குகின்றோம். அதில் மலையக பாடசாலைகளுக்கு பாரிய அபிவிருத்தி திட்டங்கள் எமது அரசாங்கத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

# தாமரை கோபுர மண்டபத்தில் மிடற்றிசை - வீணை அரங்கேற்றம்





தாமரை கோபுர அரங்கில் எதிர்வரும் மார்ச் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 05 மணிக்கு கிருஸ்ணகுமார் - மாலினி தம்பதிகளின் பிள்ளைகளின் மிடற்றிசை மற்றும் வீணை அரங்கேற்ற நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கலாநிதி இசைப் பேரொளி ஆரூரன் அருணந்தி மற்றும் சங்கீத வித்துவான் ஸ்ரீமதி நந்தினி விஜயரத்தினம் ஆகியோரின் மாணவர்களான தில்ஸா கிருஸ்ணகுமார், மோஹித்ஸால் கிருஸ்ணகுமார் ஆகியோரின் மிடற்றிசை, வீணை அரங்கேற்ற நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதமரும் கல்வி உயர் கல்வி தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய கலந்துகொள்ளவுள்ளார்.

அத்தோடு, சிறப்பு விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், புத்தசாசன மத கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹனிதும சுனில்செனவி, கௌரவ விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி, மாஸ் கபிற்றல் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் சக்தி ரணதுங்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த தமிழக அரசு தவறியுள்ளது

## மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் குற்றச்சாட்டு

*ஜோசப் நயன்*

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ச்சியாக கைதுசெய்து வருகின்றனர். இலங்கை அரசை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையில், இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

குறித்த கைது நடவடிக்கைகள் ஊடாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை கட்டுப்படுத்தப்படுகின்றதா என்ற விடயம் கேள்விக்குறியாகவே இருக்கிறது. நாங்கள் தொடர்ந்தும் இந்திய மீனவர்களுக்குத் தெரிவித்து வருகின்றோம். தொடர்ந்தும் எமது கடல் எல்லையை தாண்டி வராதீர்கள் என்ற விடயத்தை அழுத்தமாக தெரிவித்துள்ளோம். இவ்விடயத்தை இந்திய அரசுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். தமிழக அரசு சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களை கட்டுப்படுத்தத் தவறியுள்ளது.



இந்திய கடல் எல்லையை தாண்டாதீர்கள் என்று மீனவர்களின் மீன்பிடி சிட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் விதிமுறைகளை மீறி இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசிக்கின்றனர்.

அதனால் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்படுகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் அத்துமீறி நுழைந்த 32 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த 32 மீனவர்களின் நிலையை நாங்கள் நினைக்கின்றபோது உண்மையில் வேதனையாகவே உள்ளது. சக மீனவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் கைது நடவடிக்கைக்கு நாங்கள் வேதனையடைகிறோம்.

எனினும், கடற்படை முன்னெடுக்கும் கைது நடவடிக்கைகளை நாங்கள் எதிர்க்க முடியாது. குறித்த நடவடிக்கை மூலமாகவே எமது கடல் வளத்தை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

கடற்படையினர் இரவு பகல் பாராது எமது கடல் வளத்தை பாதுகாக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு மீனவர்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழக அரசு மீனவர்கள் விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். எல்லை தாண்டுவதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது எல்லை தாண்டும் இந்திய மீனவர்களுக்கு தமிழக அரசு தண்டனை வழங்க வேண்டும் .

எதிர்காலத்தில் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதை விடுத்து எல்லை தாண்டும் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்றனர்.

இதன்போது மன்னார் பனங்காட்டுகொட்டு மீனவ சங்கத்தின் பொது முகாமையாளர் அன்ரனி சங்கர், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கங்களின் பிரதேச சமாச தலைவர் அகஸ்டஸ் றோச் ஆகியோரும் கலந்துகொண்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கருத்துகளை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# விவசாய கிணற்றிலிருந்து ஆணொருவர் சடலமாக மீட்பு

*அநுராதபுரம் நிருபர்*

அநுராதபுரம், கல்னேவ பகுதியில் விவசாயக் கிணறு ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (23) கல்னேவ பொலிஸ் பிரிவின் ஹெலபதுகம பகுதிக்கு விரைந்த பொலிஸார் வயல் காணியொன்றில் அமைந்துள்ள விவசாயக் கிணற்றில் உயிரிழந்த நபருடைய சடலத்தை பிரதேச வாசிகளின் உதவியுடன் மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 40 வயதுடைய ஹெலபதுகம, கல்னேவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என அடையாளம் காணப் பட்டுள்ளார். மூன்று தினங்களுக்கு முன்னர் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதென விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இவர் கொலைசெய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்னேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


## நாணய மாற்று விதம் (24.02.2025)


| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 184.2371 | 193.6358 |
| கனேடியன் டொலர் | 204.0589 | 212.7776 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.3483 | 42.0018 |
| யூரோ | 304.8635 | 317.3546 |
| ஜப்பான் யென் | 1.9432 | 2.0185 |
| சிங்கப்பூர் டொலர் | 216.9837 | 226.8864 |
| ஸ்ரேலிங் பவுன் | 368.1766 | 382.0970 |
| சுவிஸ் பிராங் | 322.5059 | 337.7021 |
| ஐ.அ. டொலர் | 291.5126 | 300.0880 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 785.1268 |
| குவைட் | குவைட் தினார் | 959.3817 |
| ஓமான் | ஓமான் றியால் | 768.5270 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.1706 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.9000 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.5562 |

# பொலிஸாரின் உத்தரவை மீறி வேகமாக பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச்சூடு

## வாகனத்தை சோதனை செய்ததில் கஞ்சா மீட்பு





மாலபேயில் காரொன்றை நிறுத்துமாறு பொலிஸாரால் வழங்கப்பட்ட உத்தரவை மீறி பயணித்த வாகனம் மீது, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து குறித்த வாகனத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 02 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

மாலபே, ஹோகந்தர பகுதியில் நேற்று முன்தினம் (23) இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது தம்பதியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மாலபே பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின்போது, குறித்த வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

ஆனால், வாகனத்தின் சாரதி உத்தரவுகளை மீறி வேகமாக பயணித்தமையினால் பொலிஸார் காரின் டயர்களில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து, வாகனம் வீதியோரத்தில் உள்ள கம்பத்தில் மோதி நின்றது. பொலிஸார் வாகனத்தை சோதனையிட்டதில் சாரதியின் இருக் கைக்கு அடியில் கஞ்சாபொதி மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது சந்தேக நபரின் வீட்டிலிருந்து மேலும் ஒரு கிலோ கஞ்சாவை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் கம்பஹா மாவட்டம், தெல்கொட பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஆண் மற்றும் 33 வயதுடைய பெண்ணாவர்.




**பியகம அரச வைத்தியசாலைக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் டஸ்மா குரூப் நிறுவனத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை (21) நன்கொடையாக வழங்கப்பட்டது.**
**படம்:** *ஹனபி எம். தாஸீம்*

# மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு





பண்டாரவளை, கல்வல பகுதியில் மண்மேடு சரிந்து விழுந்ததில் இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பண்டாரவளை, பூனாகல வீதி கல்வலப் பகுதியில் புதிய வீடு நிர்மாணிப்பதற்கான பணிகளில் ஈடுபட்டிருந்தபோதே இவ்அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 31 வயதான ஒரு பிள்ளையின் தந்தை எனத் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை (23) இடம்பெற்றது. குறித்த நபர் தனது சக ஊழியர்களோடு மண்ணகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தபோது பாரிய மண்மேடு சரிந்து விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக சக ஊழியர்கள் தெரிவித்தனர்.

சக ஊழியர்கள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து சுமார் ஒரு மணித்தியாலங்களுக்கு மேல் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதோடு, மேலதிக விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு மக்களின் எதிர்பார்ப்புகள் பாதீட்டில் புறக்கணிப்பு

## உதுமாலெப்பை எம்.பி. சாடல்



(திகாமடுல்ல செய்தியாளர்)

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் மக்கள் நலன் பெறும் சில திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் கிழக்கு மாகாண மக்களின் எதிர்பார்ப்புகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன், தேசிய ரீதியில் இயங்கிவரும் தென்கிழக்கு பல்கலைக்கழகமும் புறக்கணிக்கப்பட்டுள்ளதென வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''கடந்த ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல்களில் பெருந்தொகையான மக்கள் தேசிய மக்கள் சக்திக்கே வாக்குகளை வழங்கியுள்ளார்கள். நீங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகக் குரல் கொடுக்கும் சந்தர்ப்பத்தை இறைவன் எதிர்க்கட்சியினருக்கு வழங்கியுள்ளான். அதற்காக நாங்கள் தொடர்ந்தும் குரல் கொடுப்போம். கடந்த காலங்களில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்க்கட்சியில் இருந்து செயற்பட்டதைப் போலவே நாங்களும் செயற்பட்டு வருகின்றோம் என்பதை ஆளுங்கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும்.

எதிர்க்கட்சி என்பதால் நாம் மக்கள் நலன்பெறும் திட்டங்களை எதிர்க்கமாட்டோம். மறைந்த பெருந் தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பினால் உருவாக்கப்பட்ட தென்கிழக்குப் பல்கலைக்கழகம் நமது நாட்டில் தேசிய பல்கலைக்கழகமாக இயங்கி வருகிறது. இப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு வருடமும் 2,000 - 2,500 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். பெருந்தொகையான சிங்கள மாணவர்கள் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வருடா வருடம் அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள். இதேவேளை, கணிசமான முஸ்லிம், தமிழ் மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இன, மொழி கடந்து தேசிய பல்கலைக்கழகமாக செயற்பட்டு வருகின்றது. இங்கு விஞ்ஞான, கலை, கலாசார, அரபு கலாசார, தொழில்நுட்பம், முகாமைத்துவம், பொறியியல் ஆகிய பீடங்கள் இயங்கி வருகின்றன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கான மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் கடந்த அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனவே, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கான மருத்துவ பீடத்தையும் சட்ட பீடத்தையும் உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை பிரதமர் மேற்கொள்ள வேண்டுமென எமது மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 2024 ஆம் ஆண்டும் இந்த வருடமும் தொடர்ந்து வெள்ள அனர்த்தம் ஏற்பட்டதால் மாகாண விவசாயிகளுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கிழக்கு மாகாண மக்களின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நஷ்டமடைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயிகளின் மிஞ்சிய நெல்லைக் கூட உரிய விலைக்கு விற்க முடியாத நிலைமை ஏற்பட்டது. நெல் அறுவடை 70% நிறைவடைந்த நிலையில், குறைந்த விலையில் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்ததன் பின்புதான் அரசாங்கம் நெல்லின் உத்தரவாத விலையை அறிவித்தது. இதனால் கிழக்கு மாகாண விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையை மாற்றி எதிர்காலத்தில் உரிய காலத்தில் நெல்லின் உத்தரவாத விலைகளை அரசாங்கம் அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல் உரிய காலத்தில் நடைபெற வேண்டுமென்பதற்காக எதிர்க்கட்சியினர் தொடர்ந்தும் போராடி வந்தனர். எதிர்க்கட்சியினர் எப்போதும் தேர்தல்களைச் சந்திக்க பயப்படவில்லை. எந்தவொரு தேர்தலையும் சந்திக்க எதிர்க்கட்சி தயாரான நிலையில் உள்ளதென்பதை ஆளும் கட்சியினர் புரிந்து கொள்ள வேண்டும். தேர்தல் நடத்தும் காலம் இடம்பெற்ற நியாயமான காரணங்களைத்தான் நாம் முன்வைத்தோம். அதற்காக தேர்தலுக்காக எதிர்க்கட்சியினர் பயந்துவிட்டோம் என்ற நிலைமைக்கு ஆளும் கட்சி வரக்கூடாது. உங்களுக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆதவைப் பயன்படுத்தி மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பெறக்கூடிய திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும்'' - என்றார்.



தோப்பூர் - தங்கபுரம் தங்க விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வின் இறுதிநாளான நேற்று திங்கட்கிழமை (24) பாற்குடபவனி இடம்பெற்றது. பள்ளிக்குடியிருப்பு சிவசக்தி அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகிய பாற்குட பவனி தங்க விநாயகர் ஆலயத்தைச் சென்றடைந்தது.

(மூதூர் செய்தியாளர்)

# மட்டக்களப்பில் போதைப்பாவனை தொடர்பில் 5,969 வழக்குகள் தாக்கல்

## மாவட்ட போதை ஒழிப்பு மாநாட்டில் தகவல்

(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்தில் போதைப்பொருளுடன் தொடர்புடைய 5,291 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 5,969பேர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள் ளதாக மட்டக்களப்பு மாவட்ட செயலக போதைப் பாவனை மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு மாவட்ட இணைப்பாளர் பற்குணம் தினேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட போதை ஒழிப்பு செயலணியின் மாவட்ட மாநாடு மாவட்ட செயலாளர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை(24) நடைபெற்றது. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், மாவட்ட உளநல வைத்திய அதிகாரி டாக்டர் டான் சௌந்தரராஜா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

குறித்த போதையொழிப்புச் செயலணி மாநாட்டில் போதைப்பொருள் பாவனையை ஒழித்தல், போதைப் பொருள் விற்பனையாளர்களைக் கண்டுபிடித்தல், மதுபாவனையைக் கண்டறிதல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

# இரண்டரை அடி நீளமான வாளுடன் சந்தேக நபர் கைது



(பாறுக் ஷிஹான்)

வாள் ஒன்றை உடைமையில் மறைத்து வைத்திருந்த சந்தேக நபரைக் கைதுசெய்து சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(23) இரவு சம்மாந்துறை பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே 39 வயதுடைய சந்தேக நபர் வாளுடன் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் சென்னல் கிராமம் 02 பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன் இரண்டரை அடி நீளமான வாள் ஒன்றும் சந்தேகநபர் வசமிருந்து மீட்கப்பட்டுள்ளது. மேலும் சந்தேக நபரை சான்றுப் பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசாரின் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலத்தின் வழிகாட்டலில் பொலிஸ் நிலையப் பெருங்குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸார் இக்கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிராந்திய உணவுப் பாதுகாப்பு, தரத்தை மேம்படுத்துதல் தொடர்பான கூட்டம்



(ஒலுவில் செய்தியாளர்)

கல்முனை பிராந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்துதல் தொடர்பான விசேட மீளாய்வுக் கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த கூட்டம் சனிக்கிழமை(22) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஐ.எல்.லாபீர், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா மற்றும் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் விளக்கக்காட்சிகளுடன் விளக்கவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிறுவனங்களைப் பதிவுசெய்கின்றபோது சுகாதார ரீதியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்தும் கல்முனை மாநகர சபை ஆணையாளருடன் கலந்துரையாடுவதென இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

# மகளிர் வன்முறைகளை தடுத்தல் தொடர்பான வேலைத்திட்டம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் அபிவிருத்திக்கான மாவட்ட காலாண்டு மீளாய்வுக் கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பில் மகளிர் பாதுகாப்பு மற்றும் மகளிர் வன்முறைகள் தடுத்தல் தொடர்பான வேலைத்திட்டமானது மாவட்ட மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர் அருணாளினி சந்திர சேகரத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

இதன்போது பெண்களுக்கான வாழ்வாதார வேலைத்திட்டங்கள், மாவட்டத்தில் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன.

இக் கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன் மற்றும் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளின் கடமையாற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான செயலமர்வு




(மட்டக்களப்பு)

காத்தான்குடி பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின் ஏற்பாட்டில் Amcor நிறுவனத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இச்செயலமர்வில் தெரிவுசெய்யப்பட்ட GSO, EDO, Field officers மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள், HRDA, Skill DO, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என 30 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இச்செயலமர்வில் பாதுகாப்பான புலம்பெயர்வு மற்றும் அரச அதிகாரிகளுக்கு மனித ஆட்கடத்தல் பற்றிய விழிப்பூட்டல் தொடர்பான தெளிவூட்டல்கள் Amcor நிறுவனத்தின் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபையில் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா



(சாய்ந்தமருது செய்தியாளர்)

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள பொது நூலகங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நேற்று திங்கட்கிழமை (24) கல்முனை மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை பொது நூலகத்தின் நூலகர் முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகவும் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். இதன்போது கல்முனை வலயக் கல்விப் பணிமனை ஆசிரிய ஆலோசகர் எம். லக்குணம் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்டு வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார்.

இதன்போது 2024 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை பொது நூலகங்களில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. அத்துடன், நூலகங்களை சிறந்த முறையில் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வருகின்ற சிரேஷ்ட வாசகர்கள் இதன்போது விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இதன்போது தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நற்பிட்டிமுனை பொது நூலகத்தால் தொகுக்கப்பட்ட சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலகர் எஸ்.எம்.ஆர். அமீனுத்தீன் இதனை அறிமுகம் செய்து வைத்தார். மருதமுனை பொது நூலகத்தின் நூலகர் ஏ.சி.ஹரீஷா சமீம் நன்றியுரையாற்றினார்.




அட்டாளைச்சேனை கமு/அக் /நிலாமியா பாடசாலையின் மணி மகுடம் சூடும் 'நிலாமியாவின் நித்திலங்கள்' மலர் வெளியீடு , 2024ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் கௌரவிப்பு என்பன அதிபர் எம்.எல்.எம்.நஸீம் தலைமையில் சனிக்கிழமை(22) அட்டாளைச்சேனை யாஹோ வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மதுல்லாஹ், கௌரவ அதிதியாக ஓய்வுபெற்ற முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர். (திராய்க்கேணி செய்தியாளர்)

# பாப்பரசரின் உடல்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடம்!

## சிறுநீரக பாதிப்பால் அவதி





பாப்பரசர் பிரான்சிஸின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ள நிலையில் தற்போது அவருக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் பாப்பரசர் பூரண நலம் பெற வேண்டி வத்திக்கான் தேவாலயத்தில் சிறப்புப் பிரார்த்தனைகள் இடம்பெற்று வருகின்றன.

கத்தோலிக்க மதத் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் (வயது 88) நுரையீரல் தொற்று காரணமாக கடந்த 14ஆம் திகதி ரோம் நகரிலுள்ள அகஸ்டினோ ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நிமோனியா மற்றும் சிக்கலான நுரையீரல் தொற்று காரணமாக ஒரு வாரத்துக்கும் மேலாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் அவருக்கு இரத்த சோகை ஏற்பட்டுள்ளது. குறைந்த பிளேட்லெட் எண்ணிக்கை காரணமாக இரத்த மாற்றத்துக்கும் உட்படுத்தப்பட்டார். இதனையடுத்து சுவாசப் பிரச்சினை ஏற்பட்டதால் அவருக்கு ஒக்சிசன் செலுத்தப்பட்டது. அவர் கவலைக்கிடமாக இருப்பதாக தகவல்கள் வெளியாகின. இதனையடுத்து வத்திக்கான் தேவாலயம் அறிக்கையொன்றை வெளியிட்டு, பாப்பரசருக்கு சுவாசிப்பதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதால் அவருக்கு அதிகளவில் செயற்கை சுவாசம் (ஒக்சிசன்) அளிக்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமின்றி, அவரது உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. தற்போது வரை ஆபத்தான கட்டத்திலிருந்து அவர் மீண்டு வரவில்லை என வத்திக்கான் தெரிவித்துள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸுக்கு இளம் வயதிலேயே நுரையீரலின் ஒரு பகுதி அகற்றப்பட்டுவிட்டது. அவருக்கு ஆஸ்துமா பாதிப்பும் இருந்து வந்தது.

'' பாப்பரசர் பிரான்சிஸுக்கு அளிக்கப்படும் சிகிச்சை பலன் அளிக்க சில நாட்கள் ஆகும். வயது முதிர்வு, ஏற்கனவே இருந்த நுரையீரல் பாதிப்பு ஆகியவை காரணமாக அவரது உடல்நிலை சீரற்ற நிலையிலுள்ளது'' என அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர் செர்ஜியோ அல்பெரி தெரிவித்துள்ளார்.

## உக்ரைனில் அமைதி ஏற்படுவதுடன் நேட்டோவில் சேர்க்கப்படுமானால்...

# ''பதவி விலகத் தயார்'' ஸெலென்ஸ்கி அதிரடி



''உக்ரைனில் அமைதி ஏற்படுவதுடன் நேட்டோ கூட்டமைப்பில் உக்ரைன் சேர்க்கப்படுமானால் நான் பதவி விலகத் தயார்'' என அந்நாட்டு ஜனாதிபதி வொளோடிமிர் ஸெலென்ஸ்கி அறிவித்துள்ளார்.

ரஷ்யா- உக்ரைன் போர் மூன்று ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆதரவு தெரிவித்தன. அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற பின்னர், ரஷ்யாவுடனான உறவைப் புதுப்பிக்க ஆர்வம் காட்டி வருகிறார்.

உக்ரைனில் கடந்த 2019ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் வெற்றிபெற்று ஸெலென்ஸ்கி ஜனாதிபதியானார். கடந்தாண்டுடன் அவரது பதவிக் காலம் முடிவடைந்தது. உக்ரைன் சட்டத்தின்படி நாட்டில் போர் இடம்பெறும் நேரத்தில் தேர்தல் நடத்தத் தேவையில்லை.

இதனிடையே உக்ரைனில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப்பின் இக்கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி,

''உக்ரைனில் அமைதி ஏற்படுவதுடன் நேட்டோ கூட்டமைப்பில் உக்ரைன் சேர்க்கப்படுமானால் பதவி விலகத் தயார். ரஷ்யாவின் முழுமையான படையெடுப்புக்கு எதிராக உக்ரைனுக்கு ட்ரம்ப் பாதுகாப்பு வழங்கவேண்டும். அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதங்கள் மிகவும் தேவை. உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே ட்ரம்ப் மத்தியஸ்தராக இருக்கவேண்டும்'' என தெரிவித்துள்ளார்.

# ஜேர்மனி பொதுத் தேர்தல்: ஆளுங்கட்சி படுதோல்வி

## ஆட்சியை பிடித்தது எதிர்க்கட்சி; புதிய அதிபராகிறார் பிரெட்றிச் மெர்ஸ்

ஜேர்மனியில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியான 'சோசியல் டெமோக்கிரட்ஸ் (ஜனநாயக சமூகம் கட்சி)' படுதோல்வியடைந்துள்ள நிலையில், எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் கட்சி சிஎஸ்யு/சிடியு' 28.5 சதவீத வாக்குகளைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் ஜேர்மனியின் புதிய அதிபராக பிரெட்றிச் மெர்ஸ் (Friedrich Merz) ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் விரைவில் பதவியேற்கவுள்ளார்.

ஜேர்மனியில் அதிபர் ஒலாப் ஸ்ஷோல்ஸ் (Olaf Scholz) தலைமையிலான சமூக ஜனநாயகக்கட்சி ஆட்சியில் இருந்து வருகிறது. கடந்தாண்டு நவம்பரில், கூட்டணி கட்சியைச் சேர்ந்தவரான நிதியமைச்சரை அதிபர் திடீர் பதவி நீக்கம் செய்தார். இதையடுத்து இடம்பெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் அரசு





தோல்வியுற்றதைத் தொடர்ந்து தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஆளும் கட்சி சார்பில் அதிபர் ஒலாப் ஸ்சோல்ஸ், கிறிஸ்துவ ஜனநாயக யூனியன் சார்பில் பிரெட்ரிக் மெர்ஸ், ஏ.எப்.டி., சார்பில் ஆலீஸ் வீடெல் ஆகியோர் அதிபர் பதவிக்கு மோதினர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (23) தேர்தல் இடம்பெற்ற நிலையில், ஓலாஃப் ஷோல்ஸ் தோல்வியடைந்திருப்பதாக முதல்கட்ட வாக்கு எண்ணிக்கை முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆளுங்கட்சியான 'சோசியல் டெமோக்கிரட்ஸ் (ஜனநாயக சமூகம் கட்சி)' கட்சியால் 16 சதவீத வாக்குகளை மட்டுமே பெற முடிந்துள்ளது.

ஜெர்மனியில் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் கட்சி சிஎஸ்யு/சிடியு' 28.5 சதவீத வாக்குகளைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இதனையடுத்து, ஜேர்மனியின் புதிய பிரதமராக பிரெட்றிச் மெர்ஸ் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இன்னொருபுறம், ஆளுங்கட்சியை பின்னுக்குத்தள்ளி தீவிர வலதுசாரிக் கூட்டணி 20 சதவீத வாக்குகளுடன் இரண்டாமிடத்தைப் பிடித்திருப்பது ஜேர்மன் வரலாற்றில் இரண்டாம் உலகப் போருக்குப்பின் குறிப்பிடத்தக்க நகர்வாக பார்க்கப்படுகிறது.



# எல்லோர் மனதிலும் 'ஜெ'வின் நினைவு இருக்கும்

## நடிகர் ரஜினிகாந்த் தெரிவிப்பு

''ஜெயலலிதா இங்கு இல்லை என்று சொன்னாலும் கூட, அவர் நினைவு எப்பொழுதும் எல்லோர் மனதிலும் இருக்கும்'' என ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டு போயஸ் கார்டனில் அவரது படத்துக்கு அஞ்சலி செலுத்திய நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சரும் அ.தி.மு.க. முன்னாள் பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவின் 77ஆவது ஜனன தினம் நேற்று (24) அனுஷ்டிக்கப்பட்டது. தமிழகத்தில் பல்வேறு இடங்களில், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஜனன தினத்தை அ.தி.மு.கவினர் கொண்டாடினர். கட்சி அலுவலகத்தில் அவரின் உருவச் சிலைக்கு இ.பி.எஸ்., மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிலையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் பக்கத்தில், ''ஜெயலலிதாவின் பிறந்தநாளில் அவரை நினைவு கூர்கிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு இரக்கமுள்ள தலைவராகவும் சிறந்த நிர்வாகியாகவும் பரவலாகப் போற்றப்படுகிறார்.

பல சந்தர்ப்பங்களில் அவருடன் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமை எனது பாக்கியம். மக்கள் நல முயற்சிகளுக்கு அவர் எப்போதும் ஆதரவாக இருந்தார்'' என்று பதிவிட்டுள்ளார்.

# மீண்டும் போர் மூளும் அபாயம்

## இஸ்ரேலுடனான அமைதிப் பேச்சை இரத்துச் செய்த ஹமாஸ்

இஸ்ரேலுடனான போர் நிறுத்த பேச்சுவார்த்தையை ஹமாஸ் அமைப்பினர் இரத்துச் செய்துள்ளனர். இதனால் காஸா முனையில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது இஸ்ரேல் மீண்டும் போரை தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமுலிலுள்ளது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தப்படி ஹமாஸ் தங்கள் பிடியிலுள்ள இஸ்ரேலியப் பணயக் கைதிகளை விடுதலை செய்து வருகிறது. அதற்கு ஈடாக இஸ்ரேல் தங்கள் நாட்டு சிறைகளிலுள்ள பலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்து வருகிறது.

அதேவேளை, தங்கள் பிடியிலுள்ள பணயக் கைதிகளில் கொல்லப்பட்ட 4 இஸ்ரேலியர்களின் உடலை கடந்த சில நாட்களுக்கு முன் ஹமாஸ் ஒப்படைத்தது. கொல்லப்பட்ட இஸ்ரேலியர்களின் உடல்கள் சவப்பெட்டியில் வைக்கப்பட்டு காஸாவின் முக்கிய நகரில் மேடை அமைக்கப்பட்டு பின்னர் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இஸ்ரேலிடம் ஒப்படைக்கப்பட்டது. இஸ்ரேலியர்களின் உடல்களை அவமதிக்கும் வகையில் காஸாவில் அணிவகுப்பு நடத்தி ஒப்படைத்ததாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது. இது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் இஸ்ரேல் தெரிவித்தது.

இதையடுத்து, கடந்த சனிக்கிழமை பணயக் கைதிகளில் மேலும் அறுவரை ஹமாஸ் விடுதலை செய்தது. இந்த நடவடிக்கையின்போதும் காஸாவில் மேடை அமைக்கப்பட்டு அணிவகுப்பு நடத்தப்பட்டு பணயக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கையின்போது மேலும் 2 பணயக் கைதிகளை ஹமாஸ் ஆயுதக்குழு காரில் அழைத்து வந்துள்ளது. அந்த பணயக் கைதிகள் தங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கெஞ்சுவது போன்ற வீடியோவையும் ஹமாஸ் ஆயுதக்குழு வெளியிட்டது.


இந்த நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த இஸ்ரேல், போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறிவிட்டதாக குற்றஞ்சாட்டியது. மேலும், 6 பணயக் கைதிகளுக்கு ஈடாக இஸ்ரேலிய சிறைகளிலுள்ள பலஸ்தீனர்களில் 620 பேரை விடுதலைசெய்ய மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தையும் தற்காலிகமாக நிறுத்தியது. பலஸ்தீன கைதிகள் 620 பேரையும் இஸ்ரேல் விடுதலை செய்யவில்லை.

பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்யாத நிலையில், இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக ஹமாஸ் குற்றஞ்சாட்டியுள்ளது. பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்யாதவரை இஸ்ரேலுடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதில்லை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த பேச்சுவார்த்தையை ஹமாஸ் இரத்துச் செய்துள்ள நிலையில், பாதுகாப்புப்படையினரை தயார் நிலையில் இருக்கும்படி இஸ்ரேல் பிரதமர் உத்தரவிட்டுள்ளார். இதன்மூலம் காஸா முனையில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது இஸ்ரேல் மீண்டும் போரை தொடங்கலாம் என அச்சம் ஏற்பட்டுள்ளது.

# மணல் ஏற்றிச்சென்ற லொறி விபத்து

**டெஸ்போட் பகுதியில் சம்பவம்**



(செ.திவாகரன்)

மஹியங்கனை பகுதியிலிருந்து தலவாக்கலைக்கு மணல் ஏற்றிச்சென்ற லொறியொன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

குறித்த விபத்து நேற்று (24) அதிகாலை 4 மணியளவில் நானுஓயா, டெஸ்போட் பகுதியில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தால் நுவரெலியா - தலவாக்கலை ஏ - 7 பிரதான வீதி வழியான போக்குவரத்து ஒரு மணித்தியாலம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் வீதியில் கொட்டப்பட்டிருந்த மணல் அகற்றப்பட்டு போக்குவரத்து வழமைக்கு கொண்டுவரப்பட்டது.

லொறியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக சாரதியால் வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டயகமவில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு



(தலவாக்கலை நிருபர்)



மலையகப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் குடும்ப வன்முறைகள் அதிகரித்து வருவதால் பிள்ளைகளின் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

அதனால் அக்கரப்பத்தனை டயகம பிரதேசத்தில் அண்மைக் காலமாக சிறுவர்களுக்கான பாதுகாப்பும் உரிய முறையில் கிடைப்பதில்லை. குடும்பங்களில் மதுபாவனை அதிகரித்து வருவதால் குடும்ப வன்முறைகளும் தலைதூக்கியுள்ளன.

இதன் காரணமாக சிறுவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதோடு சிறுவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையிலும் குடும்பங்களில் ஏற்படும் வன்முறைகளைத் தடுக்கும் நோக்கிலும் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர். ரமேஸ்வரன் மற்றும் டயகம பிரதேசத்தில் இயங்கும் வாழ்வின் வசந்தம் தைரிய தீபங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சமூகத்தில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகம், குடும்ப வன்முறைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கெதிராக விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று டயகம இலக்கம் 1 நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் 100க்கும் மேற்பட்ட பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# காசல்ரீ நீர்த்தேக்க கரையோர வனப்பகுதியில் தீப்பரவல்



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

காசல்ரீ நீர்த்தேக்க கரையோர வனப்பகுதியில் காட்டுத்தீ பரவியதால் பல ஏக்கர் காடு தீயினால் கருகி நாசமாகியுள்ளது.

மலையகப் பகுதியில் அண்மைக் காலமாக கடும் வெப்பமான காலநிலை நிலவி வருகின்றது.

இந்நிலையில், இனந்தெரியாத விஷமிகளினால் வனப்பகுதிகளுக்கு தீ வைக்கும் செயலால் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதுடன் நீரேந்தும் பகுதிகளின் நீர்மட்டமும் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. நீர்மின் உற்பத்திக்கு அதிகளவான நீரைச் சேகரித்து வைத்திருக்கும் கேந்திர நிலையமாகக் காணப்படும் காசல்ரீ நீர்த்தேக்க கரையோரப் பகுதியிலும் காசல்ரீ தோட்ட வனப்பகுதியிலும் நேற்று முன்தினம் (23) விஷமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளதாக நீர்த்தேக்க பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் காசல்ரீ நீர்த்தேக்கம் மற்றும் மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் கீழ் ரயில் நிலையங்களில் துப்புரவுப் பணி





(ஏ.எம்.ஹசனார்)

அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீலங்கா ‘தூய்மையான இலங்கை’ திட்டத்துடன் இணைந்ததாக பதுளையிலிருந்து ஒஹியா வரையிலான 12 ரயில் நிலையங்களைத் துப்புரவு செய்யும் வேலைத்திட்டம் 2000 பாடசாலை சாரணர்களின் பங்களிப்புடன் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது.

சாரணர் அமைப்பின் நிறுவுநரான ரொபர்ட் ஸ்மித் பேடின் போலின் 168ஆவது பிறந்த தினத்தையொட்டி, சுமார் இரண்டாயிரம் சாரணர்கள் ரயில் நிலையங்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழலை சுத்தம் செய்தனர்.

பதுளை, ஹாலி-எல, உடுவர, தெமோதர, எல்ல, கித்தலெல்ல, ஹீலோய, பண்டாரவளை, தியத்தலாவ, அப்புத்தளை, இதல்கஸ்ஹின்ன மற்றும் ஒஹியா ஆகிய ரயில் நிலையங்களைச் சுற்றியுள்ள பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றன.



சாரணர் அமைப்பின் நிறுவுநரான ரொபர்ட் ஸ்மித் பேடின் போலின் புகைப்படத்துக்கு மலர் மாலை அணிவித்த பின்னர் பண்டாரவளை ரயில் நிலையத்தைத் துப்புரவு செய்யும் பணி ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர தலைமையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் மாவட்ட சாரணர் ஆணையாளர் டபிள்யூ.டி.ஆர்.ஜே.மஹிந்தரத்ன உள்ளிட்ட ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட ஆணொருவரின் சடலம் மீட்பு

(யடவத்த செய்தியாளர் )

மாத்தளை, மஹவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மில்லவான பகுதி சேனையொன்றில் நேற்று முன்தினம் (23) இரவு வயோதிபரொருவர் கூரிய ஆயுதமொன்றால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக மஹவல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்துள்ள நபர் தேவாலகே நந்தசேன வயது 73 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மில்லவான, லுல்கட பகுதியில் சேனையொன்றில் அமைக்கப்பட்ட கூடாரத்திலிருந்து குறித்த நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மஹவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# சமாதான நீதவான்



தலவாக்கலை, ரத்னில்கல பிரதேசத்தைச் சேர்ந்த சின்னையா அல்பிரட் அகில இலங்கை சமாதான நீதவானாக நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி கே.டபிள்யூ.கே.எல். பிரபுத்திகா லங்காஷினி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தலவாக்கலை, கிரேட்வெஸ்டன் பாடசாலை ஆசிரியரான இவர், மெராயா தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை, வட்டகொடை தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியருமாவார்.

# காட்மோர் நீர்வீழ்ச்சிக்கு அருகில் சடலம் மீட்பு



மவுசாகலை, காட்மோர் நீர்வீழ்ச்சி பகுதியில் நேற்று (24) காலை அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக மவுசாகலை பொலிஸார் தெரிவித்தனர்.

மவுசாகலை நீர்த்தேக்கத்தில் நன்னீர் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு குழுவானது இச்சடலத்தைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கெங்காதேவி துறைமுகத்தில் தமது இஷ்டப்படி வேலைத்திட்டத்தை செய்யும் அதிகாரிகள்

**ஒதுக்கிய நிதியையும் வழங்கவில்லையென மீனவர்கள் குற்றச்சாட்டு**

(பு.கஜிந்தன்)



மீனவர்களின் கருத்துகளை உள்வாங்காது கெங்காதேவி துறைமுகத்தை, அதிகாரிகள் தன்னிச்சையாக அபிவிருத்தி செய்து வருவதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என சுழிபுரம், கெங்காதேவி கடற்றொழிலாளர் சங்க மீனவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழில் அமைச்சின் மூலம் எமது கடற்றொழில் சங்கத்துக்கு இருவேறு சந்தர்ப்பங்களில் 10 இலட்சம் ரூபாவும் 8 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டது. இந்நிதியை பயன்படுத்தி எமது துறைமுகத்தை புனரமைப்பதற்கு திட்டமிட்டிருந்தோம். ஆனால் இரண்டு நிதியும் ஒரு திட்டத்துக்கு வழங்க முடியாது என்று கூறி 10 இலட்சம் ரூபாவை எமக்கு வழங்காது திருப்பி அனுப்பிவிட்டனர். எட்டு இலட்சம் மட்டுமே எமக்கு வழங்கப்பட்டது.

எட்டு இலட்சம் ரூபாவுக்கான வேலைத்திட்டத்துக்கான வரைபை நாங்கள் அதிகாரிகளிடம் சமர்ப்பித்தோம். இருப்பினும் அவர்கள் எமது திட்டத்தை புறந்தள்ளிவிட்டு தாமு எண்ணத்துக்கு ஏற்றாற்போல் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

அவர்கள் செய்கின்ற அபிவிருத்தியால் எமக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. கிடைத்த 8 இலட்சம் ரூபா நிதியை அநியாயம் செய்கின்றனர். படகுகளை நிறுத்தி வைக்கும் பகுதிக்குள் அதிக மண் உள்ளதால் அந்த பகுதி உயரமாக காணப்படுகிறது. இதனால் அந்த பகுதிக்குள் தண்ணி இல்லாத காரணத்தால் படகுகளை துறைமுகத்தின் உள்ளே கொண்டுவந்து நிறுத்தி வைக்க முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

ஆகையால் நாங்கள், இரண்டு புறமும் உள்ள தடுப்புகளை நீக்குமாறு எமது வேலைத்திட்டத்தை முன்வைத்தோம். இரண்டு பகுதிகளிலும் உள்ள தடுப்புகளை நீக்கினால் மண் வெளியே செல்லும். இதன்போது படகுகளை துறைமுகத்துக்குள் கொண்டுவரக்கூடிய நிலை ஏற்படும்.

ஆனால் அவர்கள் அதனை செய்யாமல் வெறுமனே ஆழப்படுத்தலில் ஈடுபடுகின்றார்கள். நாங்கள் பல தடவைகள் கூறியும் எமது கருத்துகளுக்கு செவி சாய்க்கவில்லை. 121 மணித்தியாலங்கள் ஜேசிபி இயந்திரத்தை பயன்படுத்தி ஆழப்படுத்துவதே அவர்களது வேலைத்திட்டம் என்று கூறுகின்றனர். அவர்கள் இவ்வாறு ஆழப்படுத்தினாலும் மீண்டும் அந்த இடம் மூடப்படும்.

இது குறித்து யாழ். மாவட்ட கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பொறியியலாளர் கெங்காதரன் தர்சனுக்கு தெரியப்படுத்தினோம். ஆனால் அவர் எமது கருத்துகளை செவிமடுக்கவில்லை. நாங்கள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்த காரணத்தால் அதற்கு பழிவாங்கும் முகமாக ஆழப்படுத்தும் பகுதியில் 5 மீற்றர் எல்லையை குறைத்து ஆழப்படுத்துமாறு, வேலைத்திட்டத்தை செய்பவர்களிடம் கூறியுள்ளனர்.

அத்துடன் எமது கடற்பகுதியில் சுற்றுலா மையம் அமைப்பதற்கு அனுமதி கேட்டனர். சுற்றுலா மையம் அமைத்தால் எமது கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்கு பல தடவைகள் அழைப்பு மேற்கொண்டு அனுமதி வழங்குமாறு கோரினர். நாங்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்த நிலையில் அதற்கும் சேர்த்து பழிவாங்குவது போல் உள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் விரைவில் இதனை கருத்தில் கொண்டு எமக்கு உகந்த வேலைத்திட்டத்தை, எமது வரைபடத்தின்படி செய்துதர வேண்டும் என்றனர்.

# பணிகளைப் பொறுப்பேற்றார் மன்னார் மறைமாவட்ட புதிய ஆயர்







(ஜோசப் நயன்)

மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்ட அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை கடந்த சனிக்கிழமை (22) மடு திருத்தலத்தில் வைத்து ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (23) மன்னார் மறைமாவட்ட ஆயராகப் பணிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் பணிப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு, மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

புதிய ஆயர் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட வாகனத்தில் பவனியாக மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்துக்கு இன்னிசை வாத்தியங்களுடன் அழைத்துச்செல்லப்பட்டார்.

இதன்போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் பி.கிறிஸ்துநாயகம் அடிகளாரால் திருத்துது மடல் வாசிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயராக கடந்த 7 வருடங்களாகப் பணியாற்றிய ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் புதிய ஆயருக்கு புனித செபஸ்தியார் பேராலயத்தின் திறவுகோலும், புனித செபஸ்தியார் பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்தந்தை சுரேந்திரன் றெவல் அடிகளாரால் நற்கருணை பேழைக்கான திறவுகோலும், ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் செங்கோலும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்டத்தின் 4ஆவது ஆயரான மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன்போது குருக்கள், துறவியர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் உள்ளடங்கலாக பல்லாயிரக்கணக்கான மக்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் கீழ் பருத்தித்துறை கடற்கரை தூய்மைப்படுத்தல்





(சாவகச்சேரி நிருபர்)

ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் ஒரு பகுதியாக, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் எம்.பிரதீபன், பாதுகாப்புப் படைத் தளபதி (யாழ்ப்பாணம்) மேஜர் ஜெனரல் மனத யஹம்பத் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி 52 காலாட்படைப் பிரிவின் தளபதி பிரிகேடியர் பி.எஸ்.கே. ரணதுங்கமகே, பருத்தித்துறை பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் (23) பருத்தித்துறை கடற்கரைச் சூழல் துப்புரவு செய்யப்பட்டது. இதன்போது 52ஆவது காலாட்படை படையணியினர், பருத்தித்துறை பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச சபை, வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனை - மந்திகை, பருத்தித்துறை பொதுச் சுகாதார அதிகாரி அலுவலகம், இலங்கை கடற்படை, இலங்கை காவல்துறை மற்றும் உள்ளூர் பொதுமக்கள் இணைந்து துப்புரவுப் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

‘ஓர் அழகான கடற்கரை, ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத் தளம்’ என்ற கருப்பொருளின் கீழ் மேற்படி செயற்றிட்டம் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 17 அதிகாரிகள், 250 இராணுவ வீரர்கள், இலங்கை கடற்படையைச் சேர்ந்த 10 மாலுமிகள், இலங்கை பொலிஸ்துறையைச் சேர்ந்த 40 பொலிஸ்துறை அதிகாரிகள், அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களைச் சேர்ந்த 222 அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் பருத்தித்துறை கடற்கரை மற்றும் அதைச் சுற்றியுள்ள வீதியோரத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிகழ்வில் இந்து மற்றும் கத்தோலிக்க மதத் தலைவர்களுடன்- பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் கே. இளங்குமரனும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்

இங்கிலாந்தின் கவுண்டி கிளப் அணியான மிடில்செக்ஸ் மற்றும் லண்டன் ஸ்பிரிட் ஆகிய இரண்டு அணிகளில் விளையாட நியூஸிலாந்து வீரர் கேன் வில்லியம்சன் கையெழுத்திட்டுள்ளார். இந்த ஒப்பந்தம் மூலம் அவர் மிடில்செக்ஸ் அணிக்காக 14 விடாலிட்டி பிளாஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளார். அதேபோல் குறைந்தது 05 கவுண்டி சம்பியன்ஷிப் போட்டிகளிலும் விளையாடுவார். மேலும், 100 பந்து கிரிக்கெட் தொடரில் அவர் லண்டன் ஸ்பிரிட் அணியை வழிநடத்துவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளரான எட் ஜொய்ஸ் ஏப்ரல் மாதம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண தகுதிகாண் சுற்றுக்குப் பின்னர் பதவியிலிருந்து விலகவுள்ளார். 06 ஆண்டுகளாக குறித்த பதவியில் உள்ள எட் ஜோய்ஸ், அணியுடனான தமது ஒப்பந்தத்தை நீட்டிக்க விரும்பவில்லை.

★★★★★★★★★★★★★★★★★★★★

இலங்கைக்கு எதிரான தொடரிலிருந்து நியூஸிலாந்து மகளிர் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொல்லி பென்போல்ட் (23 வயது) இடது முழங்காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக விலகியுள்ளார். அவர் சத்திரசிகிச்சையை எதிர்கொள்ளவிருப்பதோடு, மீண்டு வருவதற்கு 12 வாரங்கள் எடுத்துக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தலைவி சொபி டிவைன் விலகி இருக்கும் நிலையில் இதுவும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★

9ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணியுடன் நடைபெற்ற ஆட்டத்தில் நாணய சுழற்சியில் தோல்வியை தழுவிய இந்திய அணி ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக 12 முறை நாணயசுழற்சியில் தோற்ற அணி என்ற புதிய சாதனையை இந்தியா படைத்தது. முன்னதாக நெதர்லாந்து அணி 11 போட்டிகளில் தொடர்ச்சியாக நாணய சுழற்சியில் தோல்வி கண்டிருந்தது.

★★★★★★★★★★★★★★★★★★★★

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்கத் தவறியதால் பாகிஸ்தான் அணிக்கு ஐ.சி.சி. அபராதம் விதித்துள்ளது. அதன்படி, வீரர்களுக்கு போட்டிக் கட்டணத்தில் 05 சதவீதம் ஐ.சி.சி. அபராதம் விதித்துள்ளது. இந்த குற்றத்தை பாகிஸ்தான் அணித்தலைவர் றிஸ்வான் ஒப்புகொண்டதன் காரணமாக மேற்கொண்டு விசாரணை எதுவும் ஐ.சி.சி. நடத்தவில்லை.

★★★★★★★★★★★★★★★★★★★★

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் சச்சின், சங்கக்காரவுக்கு பிறகு 14,000 ரன்களை கடந்த வீரராக விராட் கோஹ்லி இணைந்துள்ளார். இதில் அதிவேகமாக 287 இன்னிங்ஸ்களில் 14,000 ரன்கள் கடந்து கோஹ்லி சாதனை படைத்துள்ளார். முன்னதாக சச்சின் 350 இன்னிங்ஸ்களிலும் சங்கக்கார 378 இன்னிங்ஸ்களிலும் 14,000 ரன்களை கடந்தனர்.

CHAMPIONS TROPHY 2025 - PAKISTAN

## இன்றைய போட்டிகள்

போட்டி இல - 06
குழு – B
அவுஸ்திரேலியா VS தென்னாபிரிக்கா
AUSTRALIA | SOUTH AFRICA
ராவல்பிண்டி - பி.ப. 2.30 மணி

முடிவு
போட்டி இல - 05
இந்தியா VS பாகிஸ்தான்
INDIA | PAKISTAN
இந்தியா 6 விக்கெட்களினால் வெற்றி

# சம்பியன்ஸ் கிண்ண அரையிறுதியில் இந்தியா

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுடனான ஆட்டத்திலும் இலகு வெற்றியீட்டிய இந்திய அணி அரையிறுதி சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணி இந்தியாவின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 241 ரன்கள் மட்டுமே எடுத்தது.

பின்னர், 242 என்ற இலகு இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி விராட் கோஹ்லியின் சதத்துடன் 42.3 ஓவர்களில் 04 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியடைந்தது. ஏற்கனவே பங்களாதேஷை வீழ்த்திய இந்திய அணி அரையிறுதி வாய்ப்பை கிட்டத்தட்ட எட்டிவிட்டது. பாகிஸ்தானுக்கு இது 2ஆவது தோல்வியாகும். இதன் மூலம் பாகிஸ்தானின் அரையிறுதி கனவு ஏறக்குறைய முடிந்து போய்விட்டது.




# ரடுகானுவை பின்தொடர்ந்த மர்ம நபருக்குத் தடை



நட்சத்திர டென்னிஸ் வீராங்கனையாக எம்மா ரடுகானு டுபாயில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் தொடரில் பங்கேற்றார்.

கடந்த வாரம் பொது இடத்தில் ரடுகானுவை சந்தித்த நபர், மோசமான முறையில் நடந்து கொண்டார். மறுநாள் இரவு போட்டியில் பங்கேற்றபோது, மர்ம நபர் மைதானத்தின் காலரியில் இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்தார்.

பின்னர் இவர் அடையாளம் காணப்பட்டு, மைதானத்தில் இருந்து வெளியேற்றப் பட்டார். விசாரணை முடியும் வரை அவர், மகளிருக்கான தொடர்களை காண தடை விதிக்கப்பட்டுள்ளது.

# உலகின் நம்பர் 1 வீரர் சின்னருக்கு பதில் ரூட்



அடுத்த மாதம் அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் நடக்கும் டென்னிஸ் போட்டிகளிலிருந்து உலகின் நம்பர் 1 வீரர் ஜானிக் சின்னர் நீக்கப்பட்டுள்ளார். சின்னருக்குப் பதிலாக, காஸ்பர் ரூட் மார்ச் 02ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள போட்டியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இத்தாலியின் டென்னிஸ் வீரர் சின்னர் ஊக்கமருந்து சோதனையில் தோல்வியடைந்ததால் மூன்று மாத தடையை எதிர்கொண்டு வருகிறார். கடந்த ஜனவரி மாதம் அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்ற 23 வயதான இத்தாலிய வீரர், மூன்று மாத தடை உத்தரவால் எந்த கிராண்ட்ஸ்லாம் போட்டிகளையும் தவற விடமாட்டார்.

சீசனின் அடுத்த முக்கியப் போட்டியான பிரெஞ்ச் ஓபன் மே 25ஆம் திகதி தொடங்குகிறது. இந்தப் போட்டிகளில் அவரால் பங்கேற்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது முறையாக கட்டார் ஓபனை வென்ற ரூப்லெவ்

கட்டாரின் டோஹாவில் நடைபெற்ற கட்டார் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ரஷ்யாவின் ஆந்த்ரே ரூப்லெவ் சம்பியன் பட்டம் வென்றார்.

கடந்த 07ஆம் திகதி ஆரம்பமாகிய குறித்த தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இறுதி ஆட்டத்தில் உலக தரவரிசையில் 10ஆவது இடத்தில் இருக்கும் ஆந்த்ரே ரூப்லெவ் (ரஷ்யா), தரவரிசையில் 16ஆவது இடம் வகிக்கும் ஜாக் டிராபெருடன் (இங்கிலாந்து) மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆந்த்ரே ரூப்லெவ், 7:5, 5:7, 6:1 என்ற செட் கணக்கில் ஜாக் டிராபெரை வீழ்த்தி 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.



# 10 ஆண்டுகளின் பின் மே.இ.தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் ஆஸி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலிய அணி 10 ஆண்டுகளின் பின் மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது.

அவுஸ்திரேலிய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 03 டெஸ்ட், 05 ரி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இந்த தொடர்களுக்கான அட்டவணையை மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணி கடைசியாக கடந்த 2015-16ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியது. அதன்பின், 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் முதலில் தொடங்குகிறது. முதல் டெஸ்ட் போட்டி ஜூன் 25ஆம் திகதி பார்படாஸில் தொடங்குகிறது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் விளையாடிய பிறகு, அவுஸ்திரேலிய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7